வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P. 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu ඊළනාඩු

மாருதி Money Exchange (Pvt) Ltd.
MARUTHI MONEY EXCHANGE
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433 076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

Email : news@eelanadu.lk மலர் : 04 11.01.2023 புதன்கிழமை இதழ் : 33 பக்கங்கள் : 16

# கூட்டமைப்பு பங்காளிகள் சேர்ந்து புதிய கூட்டமைப்பு உருவாக்கம்!

## தமிழ் மக்கள் கூட்டணி, ஈ. பி. ஆர். எல். எவ்., தமிழ்த் தேசியக் கட்சிகள் இணைகின்றன

*கொழும்பு, ஜன. 11*

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து இலங்கை தமிழரசு கட்சி தனித்து சென்ற நிலையில் பங்காளி கட்சிகளான ரெலோ, புளொட் என்பன தமிழ் மக்கள் கூட்டணி, தமிழ்த் தேசியக் கட்சி ஈ. பி. ஆர். எல். எவ். மற்றும் ஏனைய தமிழ்த் தேசியக் கட்சிகளுடன் இணைந்து புதிய கூட்டமைப்பை அமைக்க பேச்சு நடத்தியுள்ளன.

நேற்றைய தினம் கொழும்பில் ரெலோ கட்சியின் செயலாளர் நாயகம் கோவிந்தன் கருணாகரம் எம். பியின் இல்லத்தில் நடத்திய பேச்சிலேயே இந்த முடிவுகள் எட்டப்பட்டன. இந்த சந்திப்பில், ரெலோவின் செல்வம் அடைக்கலநாதன், ஹென்றி மகேந்திரன், கு. சுரேந்திரன், விந்தன் கனகரட்ணம், புளொட் சார்பில் ஆர். ராகவன், ஈ. பி. ஆர். எல். எவ். சார்பில் சுரேஷ் பிறேமசந்திரன், தமிழ்த் தேசியக் கட்சி சார்பில் எம். கே. சிவாஜிலிங்கம் ஆகியோர் பங்கேற்றனர்.

இதனிடையே நேற்றுமுன்தினம் க. வி. விக்னேஸ்வரனுடன் நடத்தப்பட்ட பேச்சில் இந்தக் கூட்டமைப்பில் அவரின் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி இணைந்து செயல்படும் என்று ரெலோ பேச்சாளர் கு. சுரேந்திரன் தெரிவித்தார்.

இதேவேளை, இந்தப் புதிய கூட்டமைப்

15

## தேர்தல் அறிவிப்பை மீளப்பெற்றது அரசு!

*கொழும்பு, ஜன. 11*

உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கு வேட்பாளர்களிடமிருந்து கட்டுப்பணம் பெறுவதை இடைநிறுத்துமாறு பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார்.

எதிர்வரும் மாதங்களில் உள்ளூராட்சி தேர்தலை நடத்தும் நோக்கில் வேட்பாளர்களுக்கான கட்டுப்பணம் ஏற்கப்படும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்திருந்தது. கடந்த 5ஆம் திகதி முதல் எதிர்வரும் 20ஆம் திகதி வரை கட்டுப் பணத்தை செலுத்த முடியும்

15

# அரசுக்கு ஒருவார காலக்கெடு; தமிழ்த் தரப்புகள் விதித்தன!

## தீர்வுக்கான நான்கு நாள் பேச்சும் இடைநிறுத்தம்

கொழும்பு, ஜனவரி 11

**ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நிறைவேற்று அதிகாரத்தின் மூலமாக சாத்தியமான விடயங்களை ஒரு வாரத்துக்குள் - எதிர்வரும் 17ஆம் திகதிக்குள் நிறைவேற்ற வேண்டும். அது தொடர்பான பட்டியலையும் அவரின் தரப்பு கையளிக்க வேண்டும் என்று தமிழ்த் தேசிய தரப்புகள் வலியுறுத்தியுள்ளன.**

15

# உள்ளூராட்சி தேர்தலில் தமிழரசு கட்சி தனிவழி!

*கொழும்பு, ஜன. 11*

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்து வெளியேறி உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தனித்துப்போட்டியிட இலங்கை தமிழரசு கட்சி தீர்மானித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பில் உள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனின் இல்லத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பு குழு கூட்டத்திலேயே இந்த முடிவு எட்டப்பட்டது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தலைமையில் நடந்த இந்தக் கூட்டத்தில் தமிழரசு கட்சியின் சார்பில் தலைவர் மாவை சேனாதிராசா,

15

## த. தே. கூட்டமைப்பின் நிலைப்பாடு உத்தியோகபூர்வ அறிவிப்பு விரைவில்!

### இரா. சம்பந்தன் தெரிவிப்பு

*கொழும்பு, ஜன. 11*

உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலை முகங்கொடுப்பது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கட்சிகளின் நிலைப்பாடுகள் மற்றும் எனது கருத்துக்கள் ஆகியவற்றை விரைவில் உத்தியோகபூர்வமாக அறிவிப்பேன்



15

## யானை - மொட்டு கூட்டணி உள்ளாட்சி தேர்தலில் போட்டி

### நேற்றும் சந்தித்து பேச்சு

*கொழும்பு, ஜன. 11*

எதிர்வரும் உள்ளூராட்சி மன்ற தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி, சிறீ லங்கா பொதுஜன பெரமுன கூட்டாக தேர்தலில் போட்டியிட தீர்மானித்துள்ளன.

இதன்படி, சிறீ லங்கா பொதுஜன பெரமுன மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி ஆகியன நேற்று ஜனாதிபதி செயலகத்தில் சந்தித்துப் பேச்சு நடத்தின.

இதன்போது, உள்ளூராட்சி மன்ற தேர்தலில் சிறீ லங்கா பொதுஜன பெரமுனவும் ஐக்கிய தேசியக்

15

## மகிந்த, கோட்டாபயவுக்கு தடை விதித்தது கனடா!

*ஒட்டாவா, ஜன. 11*

மனித உரிமைகள் மீறல்களில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில் முன்னாள் ஜனாதிபதிகளான கோட்டாபய ராஜபக்ச, மகிந்த ராஜபக்ச உட்பட நால்வருக்கு கனடா அரசாங்கம் தடை விதித்துள்ளது.

இராணுவத்தின் முன்னாள் அதிகாரி சுனில் ரத்நாயக்க மற்றும் கடற்படைப் புலனாய்வு அதிகாரி லெப்டினன்ட் கொமாண்டர் சந்தன பிரசாத் ஹெட்டியாராச்சி ஆகியோரே கனடாவால் தடை விதிக்கப்பட்ட மற்ற இருவராவர்.

மனித உரிமைகள் மீறல்களில் ஈடுபட்ட குற்றச்சாட்டுக்களில் இவர்

15

## தமிழ் தேசிய கூட்டமைப்பு பெயரை உரிமைகோர புதிய கூட்டணி முடிவு

*கொழும்பு, ஜன. 11*

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற பெயரிலேயே உள்ளூராட்சி தேர்தலை எதிர்கொள்வதற்கு ரெலோ, புளொட் உள்ளிட்ட கட்சிகள் இணைந்து உருவாக்கியுள்ள புதிய கூட்டமைப்பு தீர்மானித்துள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து விலகி உள்ளூராட்சி தேர்தலை எதிர்கொள்வதாக இலங்கை தமிழரசு கட்சி நேற்று பங்காளிக் கட்சிகளுக்கு அறிவித்தது.

இதைத் தொடர்ந்து ஏனைய கட்சிகள் இணைந்து புதிய கூட்டமைப்பை உருவாக்கப்

15

## இப்படியும் நடக்கிறது...!

தாய்லாந்தில் விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கும் அரசாங்கத்துக்கும் இடையே பேச்சு நடைபெற்றுக் கொண்டிருந்த காலம் அது. அப்போது அங்கே ஊடகவியலாளர்கள் குவிந்திருந்தனர்.

அவ்வாறு பேச்சு பற்றிய செய்திகளை சேகரிப்பதற்காக தாய்லாந்து சென்றிருந்த ஓர் ஊடகவியலாளர் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் அவர்களைப் பேட்டி கண்டு அதனை ஒளிபரப்பியதை பார்த்த ஞாபகம்.

அதில், கூட்டமைப்பு குறித்து அவரிடம் கேட்டபோது அவர் சொன்ன பதில்:

'அரசியல் கட்சிகளை நாங்கள் அங்கீகரித்தது பாராளுமன்றத்துக்குப் போய் எங்களுடைய மக்களின் பிரச்னைகளுக்காக குரல் கொடுக்கச் சொல்லியும், இராஜதந்திர மட்டத்திலை போய் எங்களுக்காக குரல் கொடுக்கச் சொல்லியும்தான். தம்பி ராசா, ரி. என். ஏ. வந்து விடுதலைப் புலிகளின் வழிகாட்டலில்தான் செயல்படுகின்றார்கள். நீங்கள் நினைப்பதுபோல அவர்கள் தனித்தனி அரசியல் கட்சிகளாக செய்படவில்லை....' என்று அவர் தனக்கே உரிய பாணியில் பதில் சொன்னார்.

ஆனால், விடுதலைப் புலிகள் இயக்கம் மௌனிக்கப்பட்ட பின்னர், கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன், முன்னர் பாலசிங்கம் எந்த ஊடகவியலாளருக்கு மேலேயுள்ள பதிலைச் சொன்னாரோ அதே ஊடகருக்கே கூட்டமைப்பு புலிகளால் உருவாக்கப்பட்டதில்லை என்று பதிலளித்தார்.

இவை எல்லாம் பழைய சங்கதிகள். ஆனால், இப்போது புலிகளால் உருவாக்கப்பட்டதுதான் கூட்டமைப்பு என்பதை தமிழரசுக் கட்சியும் உத்தியோகபூர்வமாக உறுதி செய்திருக்கின்றது.

அதனால்தானோ என்னவோ, புலிகளால் உருவாக்கப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இல்லாமல் போய் விடக்கூடாது என்பதில் தமிழ் மக்கள் அக்கறையோடு இருக்கின்றனர். இன்று வடக்கு - கிழக்கு எங்கும் தமிழ் அரசியல் கட்சிகள் எல்லாம் ஒன்றிணைய வேண்டும் என்று வலியுறுத்தி பேராட்டங்கள் நடக்கின்றன. தமிழ் கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைந்து சமஷ்டி அடிப்படையிலான தீர்வுக்காக இந்தியாவின் மத்தியஸ்தத்துடன் பேச வேண்டும் என்று போராடிக்கொண்டிருக்க, தமிழரசுக் கட்சி தனித்து தேர்தலில் போட்டியிடவேண்டும் என்றும் கூட்டமைப்பில் மற்றைய கட்சிகளை சேர்க்கக்கூடாது எனவும் அடம்பிடிக்கின்றது.

கூட்டமைப்பு தொடங்கப்பட்டபோது, தமிழர் அரசியலில் எத்தகையதொரு நிலைமை காணப்பட்டதோ அதே போன்றதொரு நிலைமையே இப்போதும் காணப்படுகின்றது.

தமிழ்த் தேசிய அரசியல்பரப்பில் பத்துக்கும் மேற்பட்ட கட்சிகள். அவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு கோணத்தில் பயணித்துக் கொண்டிருக்கின்றன.

கூட்டமைப்பில் உள்ள மூன்று கட்சிகளே ஒன்றையொன்று விமர்சித்துக்கொண்டு, தனி ஆவர்த்தனம் செய்துகொண்டிருக்க, கூட்டமைப்பின் பிரதான கட்சியான தமிழரசும் பல்வேறு குழுக்களாக இயங்கிக் கொண்டிருக்கின்றது.

இந்த வேளையிலேயே கூட்டமைப்பில் தமழ்த் தேசியக் கட்சிகள் எல்லாவற்றையும் உள்வாங்கவேண்டும் என்றும் கூட்டமைப்பை ஒரு கட்சியாக பதிவுசெய்யவேண்டும் என்றும் ரெலோவும் புளொட்டும் போர்க்கொடி தூக்கியிருக்கின்றன.

அவர்களின் இந்தக் கோரிக்கைக்கு தமிழரசு தவிர்ந்த மற்றைய கட்சிகளும் பச்சைக்கொடி காட்டியிருக்கின்றன என்றும் செய்திகள் வருகின்றன. அப்படியோர் ஒற்றுமை முயற்சி வெற்றியளித்தால், தமிழரசு தனித்து விடப்படலாம்.

விக்னேஸ்வரனின் கட்சியில் யாழ்ப்பாண முன்னாள் மேயர் வி. மணிவண்ணனும் இப்போது இணைந்திருக்கின்றார்.

ரெலோ, புளொட், விக்னேஸ்வரனின் தமிழ் மக்கள் கூட்டணி, ஈ. பி. ஆர். எல். எவ்., சிறீகாந்தா - சிவாஜிலிங்கத்தின் தமிழ் தேசியக் கட்சி என்று ஐந்து கட்சிகள் இணைந்து இயங்கக்கூடிய சாத்தியக்கூறுகளே காணப்படுகின்றன. மேலும் சில சிறிய கட்சிகளும் இணைய வாய்ப்புண்டு. அவ்வாறு இணைகின்றபோது தமிழ் மக்களின் விருப்பத்துக்கு ஏற்ப இணைந்து செயல்பட அவர்கள் முன்வந்ததாகவே கருதலாம்.

இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த சந்தர்ப்பத்தில் தமிழரசு ஏன் தனித்து தனி ஆவர்த்தனம் செய்ய விரும்புகின்றது என்பதை அறிந்துகொள்ள இந்த ஊர்க்குருவி பறந்து திரிந்து சில தகவல்களை சேகரித்தபோது கிடைத்த தகவல்கள் ஆச்சரியத்தை தந்தன. அவை பற்றி பின்னர் ஒரு நாளில் பார்ப்போம்.

**- ஊர்க்குருவி**

# நாட்டின் நலனுக்காக ஐ. தே. கவுடன் கூட்டணி அமைப்பதில் தவறு இல்லை!

## அமைச்சர் பந்துல குணவர்த்தன

கொழும்பு, ஜன. 11

நாட்டில் கட்சியும் இல்லை. கொள்கையும் இல்லை. நாட்டின் நலன் கருதி ஐக்கிய தேசிய கட்சியுடன் கூட்டணி அமைப்பதில் எவ்வித தவறும் இல்லை. பொருளாதார நெருக்கடிகளிலிருந்து மீள்வதற்காக எந்தவொரு அரசியல் மாற்றத்தினையும் எதிர்கொள்ள வேண்டும் என்று அமைச்சரவை பேச்சாளர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

சிறீ லங்கா பொதுஜன பெரமுன மற்றும் ஐக்கிய தேசிய கட்சி ஆகிய இரண்டும் முற்றிலும் வேறுபட்ட கொள்கைகளைக் கொண்டுள்ள கட்சிகளாகும்.

இந்நிலையில் இவ்விரு கட்சிகளும் இணைந்து கூட்டணியமைப்பது வெற்றியளிக்குமா என்று நேற்று செவ்வாய்கிழமை இடம்பெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் கேள்வியெழுப்பப்பட்டது. இதற்கு பதிலளிக்கும் போது மேற்கண்டவாறு தெரிவித்த அமைச்சர் மேலும் குறிப்பிடுகையில்,

நாட்டில் தற்போது கட்சிகளோ , கொள்கைகளோ கிடையாது. பொருளாதார நெருக்கடிகளிலிருந்து எவ்வாறு நாட்டைக் கட்டியெழுப்புவது என்பதே பெரும்பாலானோரது எதிர்பார்ப்பாகவுள்ளது. எனவே நாட்டின் நலன் கருதி இவ்வாறான அரசியல் மாற்றங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. மிகவும் அபாயமான கட்டத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்.

நாட்டில் தற்போது இரு பிரதான குழுக்களே செயற்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஒரு குழு நாட்டை முன்னேற்றுவதற்கும் , பிரிதொரு குழு நாட்டை முன்னேற்றுவதற்கான எந்தவொரு அடிப்படை தீர்வும் அற்ற நிலையிலும் உள்ளதாகும்.

தற்போது அரச உத்தியோகத்தர்களுக்கு கூட சம்பளம் வழங்க முடியாத நிலைமையிலேயே அரசாங்கம் காணப்படுகிறது. இதற்காக கடன் பெற முடியாது. பணத்தை அச்சிடவும் முடியாது. மீண்டும் மீண்டும் கடன் வழங்குவதால் வங்கி கட்டமைப்புக்கள் வீழ்ச்சியடையும். எனவே இவற்றை தவிர்த்துக் கொள்வதற்காக கட்சி பேதமின்றி அனைவரும் ஒத் துழைப்புடன் செயல்பட வேண்டும் - என்றார். (ஐ)

# பருத்தித்துறை நகர சபையின் தவிசாளர் பதவி தமிழரசு வசம்!

## ஆதரவு வழங்கியது ஈ.பி.டி.பி.

யாழ்ப்பாணம், ஜன. 11

பருத்தித்துறை நகர சபைத் தவிசாளர் பதவிக்கு நேற்று நடைபெற்ற வாக்கெடுப்பில் தமிழரசுக் கட்சியை சேர்ந்த வேலுப்பிள்ளை நவரட்ணராஜா தெரிவு செய்யப்பட்டார்.

புதிய தவிசாளர் பதவிக்கான வாக்கெடுப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்னிறுத்திய வேட்பாளருக்கு ஆதரவாக ஈ.பி.டி.பி., தமிழர் விடுதலைக் கூட்டணி மற்றும் சமத்துவக் கட்சி உறுப்பினர்களும் வாக்களித்திருந்தனர்.

இதன்மூலம் பருத்தித்துறை நகரசபையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஈ.பி.டி.பி, சமத்துவக்கட்சி என்பன இணைந்து ஆட்சியமைத்துள்ளன.

நேற்று நடைபெற்ற புதிய தவிசாளர் தெரிவில் கூட்டமைப்பு வேட்பாளர் 8 வாக்குகளையும், எதிர்த்து போட்டியிட்ட தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி வேட்பாளர் 6 வாக்குகளையும் பெற்றனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் வேலுப்பிள்ளை நவரட்ணராஜா போட்டியிட்டார். அவரைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 5 உறுப்பினர்களும், ஈ.பி.டி.பி, சமத்துவக்கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலா ஒவ்வொரு உறுப்பினர்களும் ஆதரித்தனர்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் வேட்பாளர் கணபதிப்பிள்ளை பாலசுப்ரமணியத்தை முன்னணியின் 6 உறுப்பினர்களும் ஆதரித்தனர்.

இதன்மூலம் 2 மேலதிக வாக்குகளை பெற்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர் வே.நவரட்ணராஜா வெற்றி பெற்று புதிய தவிசாளராக தெரிவாகினார்.

ஈ.பி.டி.பியின் ஒரு உறுப்பினர் நேற்று சபைக்கு சமூகமளிக்கவில்லை.

2023ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தை நிறைவேற்ற முடியாத நிலையில் பருத்தித்துறை தவிசாளர் பதவி விலகியதை தொடர்ந்து உருவான தவிசாளர் வெற்றிடத்துக்கு நேற்று தேர்தல் நடைபெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# தினேஷ் ஷாப்டர் மரணம் மூடிய அறைக்குள் சாட்சியம்

கொழும்பு, ஜன. 11

பிரபல வர்த்தகர் தினேஷ் ஷாப்டரின் மர்மமான உயிரிழப்பு தொடர்பில் நீதவான் விசார ணைகள் நேற்று கொழும்பு மேலதிக நீதிவான் ரஞ்சித்ரா ஜெயசூரியவின் உத்யோகபூர்வ அறையில் நடைபெற்றது.

இதன்போது உயிரிழந்த ஷாப்டரின் உடலை அடையாளங் கண்ட அவரது சகோதரரிடம் சாட்சிகள் பதிவு செய்யப்பட்டன.

மூடிய அறைக்குள் 45 நிமிட சாட்சிகளை ஷாப்டரின் சகோதரர் வழங்கியுள்ளார்.

மேலதிக சாட்சிகள் பதிவு நாளை மறுதினம் நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# ஈஸ்டர் தாக்குதல் குண்டு தயாரிப்பு 6 பேர் மீதான வழக்கு ஒத்திவைப்பு!

கொழும்பு, ஜன. 11

உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல்களின் போது பயன்படுத்தப்பட்டதாக கூறப்படும் 21 குண்டுகளை தயாரித்தமை, சதி செய்தமை தொடர்பில் 6 பிரதிவாதிகளுக்கு எதிராக சட்ட மா அதிபர் கொழும்பு மேல் நீதிமன்றில் குற்றப் பகிர்வுப் பத்திரம் தாக்கல் செய்துள்ள நிலையில், இந்த வழக்கு எதிர்வரும் 16ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இந்த வழக்கு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி நவரட்ண மாரசிங்க முன்னிலையில் விசாரணைக்கு வந்த போது, இவ்வாறு அந்த வழக்கு ஒத்திவைக்கப்பட்டது.

மொஹம்மட் சிபான் சத்தார், செய்யத் அபூ மொஹம்மட் அஸ்ரப், மொஹம்மட் இஷாக் மொஹம்மட் நிலாப்தீன் அல்லது அர்ஷாத், குணசீலன் ரவீந்ரன் அல்லது மொஹம்மட் இஷாக், ஷெய்க் மொஹம்மட் பரீக் மொஹம்மட் பௌசி, மொஹம்மட் மொயினுத்தீன் மூசா அல்லது அப்துல்லாஹ் ஆகிய 6 பிரதிவாதிகளுக்கு எதிராகவே இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கொழும்பு சினமன் கிராண்ட் ஹோட்டலின் தப்ரபேன் உணவகத்தில் தற்கொலை குண்டுதாரியாக குண்டை வெடிக்கச் செய்த, மொஹம்மட் இப்ரஹீம் இன்ஷாப் அஹமட்டின் ஆலோசனைக்கு அமைய கடந்த 2018 ஜனவரி முதலாம் திகதிக்கும் மார்ச் 30 ஆம் திகதிக்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் குண்டு தயாரித்துள்ளதாக வெளிப்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவித்து, பிரதிவாதிகளுக்கு எதிராக பயங்கரவாத தடை சட்டத்தின் கீழ் குற்றச்சாட்டு சட்ட மா அதிபரால் முன் வைக்கப்பட்டுள்ளது.

முதலாவது பிரதிவாதிக்காக சட்டத்தரணி மொஹம்மட் பஸீர் ஆஜரான நிலையில் ஏனைய ஐவர் சார்பிலும் சிரேஷ்ட சட்டத்தரணி ருஷ்தி ஹபீப் மற்றும் சட்டத்தரணி ரிஸ்வான் உவைஸ் ஆகியோர் ஆஜராகினர்.

பிரதிவாதிகள் சுமார் 3 வருடங்களாக விளக்கமறியலில் இருக்கும் நிலையில், பிணை தொடர்பில் நேற்று வாதங்களை முன் வைக்க எதிர்பார்க்கப்பட்டிருந்த போதும், அரச சட்டவாதி தயாராக இல்லாமையால் அது குறித்து வழக்கு எதிர்வரும் 16 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது. (ஐ)

ஈழநாடு
Eelanadu
11.01.2023 புதன்கிழமை
பிலவ வருடம், மார்கழி 27

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

**E-mail: eelanaduweekly@gmail.com**
**தொலைபேசி : 021 730 1370**

# இனி கூட்டமைப்பு இல்லையா?

இதுவரை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக இயங்கிய மூன்று கட்சிக் கூட்டிலிருந்து இலங்கை தமிழரசு கட்சி தனியாக செல்வது உறுதி யாகியிருக்கின்றது. இதுவரையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இயங்கிய ரெலோ மற்றும் டி. பி. எல். எவ் (புளொட்) ஆகிய கட்சிகள் கூட்டமைப்பிலிருந்து ஏற்கனவே வெளியேறியிருக்கும் கட்சிகளுடன் இணைந்து இயங்கும் முடிவை எடுத்திருக்கின்றன.

2009இல் யுத்தம் மோசமான அழிவுகளுடன் முடிவுற்றது. மூன்று தசாப்தங்களுக்கும் மேலாக தமிழ்த் தேசிய அரசியலை தீர்மானித்த தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு அரசியல் அரங்கிலிருந்து இல்லா மலாக்கப்பட்டது. இந்தக் காலத்திலிருந்து ஏதோவொரு வகையில் தமிழ்த் தேசிய அரசியலை நகர்த்தும் பிரதான அரசியல் சக்தியாக தமிழ்த் தேசிய கூட்டமைப்பே இருந்தது. கூட்டமைப்பின்மீது பலவாறான விமர்சனங்கள் இருந்த போதிலும்கூட, தமிழ் மக்களை ஓர் அரசியல் திரட்சியாக பேணிக் கொண்டதில் கூட்டமைப்புக்கே பிரதான பங்கு உண்டு. கூட்டமைப்பி லிருந்து வெளியேறிய அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் பின்னர், ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (ஈ. பி. ஆர். எல். எவ்), விக்னேஸ் வரன் ஆகியோர் தனியான அரசியல் நகர்வுகளை முன்னெடுத்தபோதி லும்கூட மக்களை ஓரிடத்தில் திரட்டக் கூடிய வல்லமையை அவர்கள் நிரூபிக்கவில்லை. இந்த பின்னணியில் நோக்கினால், விடுதலைப் புலிகளுக்கு பின்னரான கடந்த பதின்மூன்று வருட கால அரசியலென்பது கூட்டமைப்பின் அரசியல்தான். இனி அந்தக் கூட்டமைப்பு இல்லையா?

சில கட்சிகள் இணைந்து ஓர் அரசியல் அணியாக செயல்படும்போது, அங்கு என்னதான் கொள்கைகள் தொடர்பில் பேசினாலும்கூட, தேர்தல் தான் கட்சிகளின் கூட்டைத் தீர்மானிக்கின்றது. கடந்த பதின்மூன்று வருடங்களாக கூட்டமைப்பாக கட்சிகள் இயங்கியதற்கு பின்னால் தேர்தல்தான் பிரதான பங்குவகித்தது - கொள்கையல்ல. எனவே, தேர்தலில் கூட்டு இல்லையென்றால் அதன் பின்னர் கட்சிகளால் கூட்டாக இயங்க முடியாது. இந்த பின்புலத்தில் நோக்கினால் தமிழரசு கட்சியும் பங்காளிக் கட்சிகளும் ஒரு தேர்தல் கூட்டில் இல்லையென்றால் தமிழ் தேசியக் கூட்டமைப்பும் இல்லை. பங்காளிக் கட்சிகள் தங்களை கூட்ட மைப்பாக பிரகடனம் செய்யப் போகின்றனவா? எவ்வாறு? இதுவரையில் கட்சிகளின் ஒற்றுமை, ஓரணி தொடர்பிலெல்லாம் பேசிவந்த சிவில் சமூக அமைப்புக்கள், மதத்தலைவர்கள், புத்திஜீவிகள் இப்போது என்ன செய்யப் போகின்றனர்? யாரின் பக்கமாக நிற்கப் போகின்றனர்?

இனி கூட்டமைப்பு இல்லை என்பதை தமிழ் மக்கள் எவ்வாறு எடுத்துக்கொள்ளப் போகின்றனர்? அனைத்தையும் சாதாரணமாக கடந்து செல்வதைப் போல் இதனையும் கண்டு கொள்ளாமல் கடந்துவிடு வார்களா?

சம்பந்தனுக்கு பின்னர்தான் கூட்டமைப்பு உடையும் என்னும் எதிர்பார்ப்பு பரவலாக இருந்தது. ஆனால், சம்பந்தன் இருக்கின்றபோதே, அவர் இப்போதும் கூட்டமைப்பின் தலைவரென்று கூறிக்கொண்டிருக்கும் போதே, கூட்டமைப்பு உடைவுற்றிருக்கின்றது. அரசியல் தீர்வைத்தான் வெற்றிகொள்ள சம்பந்தனால் முடியவில்லை. ஆனால், ஆகக்குறைந்தது, கூட்டமைப்பை தனது காலத்தில்கூட பேணிப்பாதுகாக்க முடியாதவொரு மூத்த மனிதராகத் தோல்வியுற்றிருக்கின்றார். சம்பந்தனின் எண்ண வோட்டம்தான் தமிழரசு கட்சிக்குள் தனித்து நிற்க வேண்டுமென்னும் சிந்தனையை ஏற்படுத்தியது. பங்காளிக் கட்சிகள் எதிர்காலத்தில் தலை யெடுத்துவிடலாம். அது நடந்தால், தமிழரசு கட்சியின் ஆதிபத்தியம் இல்லாமல் போய்விடுமென்னும் அச்சத்திலிருந்தும் எதிர்கால தேர்தல் வெற்றியை கருத்தில் கொண்டுமே, இவ்வாறானதொரு தீர்மானம் எடுக்கப்பட்டிருக்கின்றது.

இந்த அதிகார போட்டியில் தமிழரசு கட்சி வெற்றிபெறலாம் அல்லது கூட்டாக நிற்போர் வெற்றிபெறலாம் - ஆனால், தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பு?

# ஊழல்வாதிகளை தேர்தலில் வேட்பாளர்களாக நியமிக்காதீர்!

## மார்ச் 12 இயக்கம் வலியுறுத்து

*கொழும்பு, ஜன. 11*

ஊழல்வாதிகளை எதிர் வரும் உள்ளூராட்சி தேர்தல் களில் போட்டியிடுவதற் கான வேட்பாளர்களாக நிய மிக்கவேண்டாம் என மார்ச் 12 இயக்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

அனைத்து கட்சிகளும் நேர்மையான ஊழலில் ஈடு படாத நபர்களை வேட்பா ளர்களாக நியமிக்கவேண்டும் இதன் மூலம் சிறந்த நாட்டை உருவாக்க முடியும் என மார்ச் 12 இயக்கம் தெரிவித் துள்ளது.

2015 மார்ச் 12 ம் திகதி தாங்கள் வெளியிட்ட அளவு கோல்களை அடிப்படையாக வைத்து வேட்பாளர்களை தெரிவு செய்யவேண்டும் என மார்ச் 12 இயக்கத்தின் ஏற்பாட்டாளர் ரோகண ஹெட்டியராச்சி வேண்டு கோள் விடுத்துள்ளார்.

வேட்புமனுவில் கைச் சாத்திடும்போது வேட்பா ளர்கள் தங்கள் சொத்துக்கள் குறித்து அறிவித்திருப்பதை உறுதிசெய்யுமாறு அனைத்து கட்சிகளையும் அவர் கேட்டுக்கொண்டுள் ளார்.

நாட்டில் சமீபத்தில் ஏற் பட்ட எழுச்சி இளைஞர்கள் உட்பட மக்கள் அமைப்பு முறை மாற்றத்தை விரும்பு கின்றனர் என்பதை வெளிப் படுத்தியுள்ளது தாங்கள் எதிர்பார்த்த மாற்றத்தை அரசியல் கட்சிகள் வழங்கு வார்கள் என மக்கள் எதிர் பார்த்துள்ளனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ஐ)

# அரச ஊழியரின் சம்பளம், ஓய்வூதியம் தொடர்பாக அச்சமடைய வேண்டாம்!

## நிதி இராஜாங்க அமைச்சர்

*கொழும்பு, ஜன. 11*

அரசாங்க ஊழியர்களுக் கான சம்பளங்கள், ஓய்வூதி யங்கள் குறித்து பொதுமக் கள் கவலையடையத் தேவை யில்லை என இராஜாங்க அமைச்சர் செகான் சேம சிங்க தெரிவித்துள்ளார்.

அரசாங்க ஊழியர்களின் சம்பளங்கள், ஓய்வூதியங்கள், சமுர்த்தி போன்ற ஏனைய கொடுப்பனவுகளை வழங்கு வதற்கு அரசாங்கம் முன்னு ரிமைஅளிக்கின்றது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இது குறித்து தேவையற்ற அச்சங்கள் அவசியமில்லை எனவும் அவர் தெரிவித்துள் ளார்.

தற்போதைய நெருக்க டிக்கு தீர்வை காண்பதற்கான திட்டத்தை அரசாங்கம் நடைமுறைப்படுத்துகின்றது என ருவிற்றரில் குறிப்பிட் டுள்ள அவர்நாட்டின் பொரு ளாதாரம் ஸ்திரமான நிலை யில் உள்ள போதிலும் நாங்கள் இன்னமும் முழு மையான நெருக்கடியிலி ருந்து விடுபடவில்லை என வும் தெரிவித்துள்ளார். (ஐ)

# சங்கிலியன் மன்றத்தில் சங்கிலி மன்னனுக்கு சிலை!

*யாழ்ப்பாணம், ஜன. 11*

நல்லூர் சங்கிலியன் மன் றத்தின் 78ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு யாழ்ப் பாணத்தின் கடைசி மன் னான சங்கிலியனுக்கு சிலை நிறுவும் பணிகள் ஆரம்பமா கியுள்ளன.

சங்கிலியன் மன்றத்தில் இந்த சிலை நிறுவும் பணிகள் நடைபெறவுள்ளன. சங்கி லிய மன்னனின் சிலை திறப்பு விழாவை முன்னிட்டு மாணவர்களுக்கான பல் வேறு போட்டிகளை நடத் துவதற்கும் மன்றத்தினர் நடவடிக்கைகளை முன் னெடுத்துள்ளனர். (ஐ)

# பொலிஸ் உத்தியோகத்தர் வீதியில் சடலமாக மீட்பு!

*வவுனியா, ஜன. 11*

வவுனியா தாண்டிக் குளத்தில் பொலிஸ் உத்தி யோகத்தர் ஒருவர் சடலமாக நேற்று மீட்கப்பட்டார்.

தாண்டிக்குளம் வளை வுக்கு அருகில் மோட்டார் சைக்கிளுக்கு அருகில் காணப்பட்ட சடலம் ஈச்சங் குளம் பொலிஸ் நிலை யத்தில் பணிபுரியும் பொலிஸ் உத்தியோகத்தர் என தெரியவந்துள்ளது.

இவரின் மரணத்துக்கு விபத்து காரணமாக இருக் கலாம் என்று கூறப்படு கின்றது. மீட்கப்பட்ட சடலம் பிரேத பரிசோத னைக்காக வவுனியா மருத் துவமனையில் ஒப்படைக் கப்பட்டுள்ளது.

பொலிஸார் மேலதிக விசாரணைகளை தொடர்ந்து வருகின்றனர். (ஐ)

# சொற்பொழிவு

*யாழ்ப்பாணம், ஜன. 11*

நீர்வேலி அருள்மிகு கந்த சுவாமி ஆலயத்தில் நடத் தப்படும் வாராந்த சிறப்பு சொற்பொழிவு கோயிலின் சண்முக விலாச மண்டபத் தில் எதிர்வரும் வெள்ளிக் கிழமை மாலை 5.00 மணிக்கு நடைபெறும்.

சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப் பில் நடைபெறும் இந்த நிகழ்வில் தலைமை உரையை பரிபாலன சபைத் தலைவர் த. சோதிலிங்கம் ஆற்றுவார். சிறப்புச் சொற்பொழிவை இளம் சைவப்புலவர் நித்திய பாபுதரன் ‘இந்துகளின் வாழ்வியலில் தைப்பொங் கல்’ என்ற தலைப்பில் ஆற்று வார். (ஐ)

# அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



ஜனவரி - 11 புதன்கிழமை
சுபகிருது வருடம் - மார்கழி 27
நல்ல நேரம் : 07.30 - 9.00
ராகு காலம் : 03.00 - 04.30
திதி : சதுர்த்தி




**மேடம்**
சங்கடம் விலகும். உங்கள் எதிர்பார்ப்பு நிறைவேறும். முயற்சி ஒன்று லாபம் தரும். திட்டமிட்டு செயல்பட்டு நீங்கள் நினைத்ததை சாதிப்பீர்கள். வருமானம் அதிகரிக்கும். செல்வாக்கு அதிகரிக்கும்.

**இடபம்**
துணிச்சலாக செயல்பட்டு உங்கள் வேலைகளை முடித்துக் கொள்வீர்கள். உங்கள் செயல்களில் சில சங்கடத்தை சந்திக்க வேண்டி வரும். எந்தவொரு வேலையிலும் அலட்சியம் வேண்டாம்.

**மிதுனம்**
நேற்றைய எண்ணம் பூர்த்தியாகும். காலையில் ஒரு முயற்சி நிறைவேறும். சகோதரர்கள் வழியில் நன்மை அதிகரிக்கும். தைரியமுடன் செயல்பட்டு உங்கள் விருப்பத்தை நிறைவேற்றிக் கொள்வீர்கள்.

**கடகம்**
காலையில் ஒரு முயற்சி நிறைவேறும். சகோதரர்கள் வழியில் நன்மை அதிகரிக்கும். எதிர்பார்ப்பு லாபம் தரும்.தைரியமுடன் செயல்பட்டு உங்கள் விருப்பத்தை நிறைவேற்றிக் கொள்வீர்கள்.

**சிம்மம்**
பொருளாதார நெருக்கடி அகலும். வியாபாரத்தில் இருந்த தடை விலகும். உங்கள் எண்ணம் நிறைவேறும் நாள். கவனமுடன் செயல்பட்டு பிரச்னைகளில் இருந்து விடுபடுவீர்கள்.

**கன்னி**
அலைச்சலும் செலவும் அதிகரிக்கும். திட்டமிட்டு செயல்படுவதால் நன்மை உண்டாகும். உங்கள் முயற்சி இழுபறியாகும். அரசு வழியில் சங்கடம் தோன்றும். கவனமுடன் செயல்படுங்கள்.

**துலாம்**
எதிர்பார்த்த பணம் இன்று வரும். நிதிநிலை உயரும் நாள். மகிழ்ச்சியான நாள். வியாபாரத்தில் இருந்து வந்த தொய்வான நிலை விலகும். எதிர்பார்த்த தகவல் வந்து சேரும்.

**விருட்சிகம்**
வியாபாரத்தில் ஏற்பட்ட தடை விலகும். உங்கள் முயற்சியில் லாபம் காண்பீர்கள். எதிர்பார்த்தவற்றில் நன்மை அடைவீர் கள். நினைத்ததை நிறைவேற்றி லாபம் காண்பீர்கள். செல்வாக்கு அதிகரிக்கும்.

**தனுசு**
நேற்று இருந்த நெருக்கடி விலகும் நாள். வருமானத்தில் ஏற்பட்ட தடை விலகும். காலையில் குழப்பம் ஏற்படும். இருந்தாலும் தெளிவுடன் செயல்படுவீர்கள். கவனமுடன் செயல்பட்டு நினைத்ததை சாதிப்பீர்கள்.

**மகரம்**
நன்மை அதிகரிக்கும் நாள். காலையில் சந்திராஷ்டமம் தொடங்குவதால் செயல்களில் கவனம் தேவை. புதிய முயற்சி இன்று இழுபறியில் முடியும். செயல்களில் விழிப்புணர்வு அவசியம்.

**கும்பம்**
துணிச்சலுடன் செயல்பட்டு ஒரு முயற்சியில் வெற்றி காண்பீர்கள். வருமானம் அதிகரிக்கும். குடும்பத்தினருடன் ஏற்பட்ட சங்கடம் விலகும். உங்கள் எதிர்பார்ப்பு நிறைவேறும் நாள்.

**மீனம்**
வருமானத்தில் ஏற்பட்ட தடை நீங்கும் நாள். டைபட்ட பணிகளை மீண்டும் தொடர்வீர். மனதில் நம்பிக்கை உண்டாகும் நாள்.குடும்பத்தில் ஒருவரின் எதிர்பார்ப்பை நிறைவேற்றுவீர்கள்.

# தமிழக அரசு சின்னத்தை புறக்கணித்தார் ஆளுநர்!

## மீண்டும் வெடித்தது சர்ச்சை

சென்னை, ஜன. 11

ஆளுநர் மாளிகையில் நடைபெறும் பொங்கல் விழாவுக்கான அழைப்பிதழில் தமிழ்நாடு அரசின் இலச்சினை இல்லாதது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

தமிழ்நாடு என்ற வார்த்தையை பயன்படுத்தாமல் தொடர்ந்து ஆளுநர் ஆர். என். ரவி தவிர்த்து வரும் நிலையில், நேற்று நடைபெற்ற சட்டப் பேரவை கூட்டத்தில் தமிழ்நாடு, திராவிட மொடல் போன்ற வார்த்தைகளை பயன்படுத்தாதது சர்ச்சையானது.

இந்நிலையில், வருகின்ற ஜனவரி 12ஆம் திகதி மாலை 5.30 மணிக்கு ஆளுநர் மாளிகையில் நடைபெறும் பொங்கல் விழாவுக்கு பாராளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அழைப்பிதழ் வழங்கப்பட்டுள்ளது.

இந்த அழைப்பிதழில் தமிழக ஆளுநர் என அச்சிடக்கப்பட்டதுடன், தமிழ்நாடு அரசின் இலச்சினையில் 'தமிழ்நாடு' என்று எழுதப்பட்டிருப்பதால் மாநில அரசின் இலச்சினையும் அழைப்பிதழில் இடம்பெறவில்லை. மாறாக மத்திய அரசின் இலட்சினை மட்டுமே இடம்பெற்றிருப்பது பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த ஆண்டு அச்சடிக்கப்பட்ட அழைப்பிதழில் தமிழ்நாடு அரசின் இலச்சினையும் தமிழ்நாடு ஆளுநர் எனவும் அச்சடிக்கப்பட்டிருந்ததும் குறிப்பிடத்தக்கது.

இந்த அழைப்பிதழை பகிர்ந்துள்ள மதுரை எம். பி., சு.வெங்கடேசன், "கடந்த முறை வந்த அழைப்பிதழில் தமிழ்நாடு அரசின் இலச்சினை இருந்தது. இந்த முறை வந்துள்ள அழைப்பிதழில் மூன்று இடங்களிலும் இந்திய அரசின் இலச்சினை மட்டுமே இருக்கிறது. நமது இலச்சினையில் தமிழ்நாடு என்று எழுதப்பட்டுள்ளதால் அதனைப் பயன்படுத்த மறுத்துள்ளார். இதே போல தமிழ்நாட்டு மக்களின் வரிப்பணத்திலிருந்தும் வாடகை வீட்டிலிருந்தும் ரோசப்பட்டு வெளியேறுவார் என்று எதிர்பார்க்கலாமா?", என்று தனது கண்டனத்தை ருவிற்றரில் பதிவிட்டுள்ளார்.

தமிழக சட்டப்பேரவையில் நேற்றுமுன்தினம் ஆளுநர் ஆர். என். ரவி உரையாற்றுகையில், அரசால் அச்சடிக்கப்பட்ட ஆளுநர் உரையில் இருந்த திராவிட மொடல், தமிழ்நாடு, சமூகநீதி என்ற வார்த்தைகளையும், அண்ணா, பெரியார், அம்பேத்கர், கலைஞர் உள்ளிட்ட தலைவர்களின் பெயர்களையும் படிக்காமல் தவிர்த்தார். ஆளுநரின் இந்த செயலுக்கு சட்டப்பேரவையிலேயே எதிர்ப்பு தெரிவித்த முதல்வர் மு.க.ஸ்டாலின், அச்சடிக்கப்பட்ட உரை மட்டுமே அவைக் குறிப்பில் இடம்பெறும் என்று தீர்மானம் நிறைவேற்றினார்.

இதையடுத்து, தேசியக் கீதம் இசைக்கப்பட்டு முறைப்படி பேரவைக் கூட்டம் முடிவதற்கு முன்னதாக பாதியிலேயே பேரவையிலிருந்து ஆளுநர் புறப்பட்டுச் சென்றது பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# ஒன்றிய அரசு என்று கூறி அரசியல் செய்வதே தவறு

## ஆளுநர் சொல்கிறார்

சென்னை, ஜன.11

ஒன்றிய அரசு என்பது தவறில்லை. ஆனால், அதனை வைத்து அரசியல் செய்யும் போதுதான் பிரச்னை ஆகிறது என்று ஆளுநர் மாளிகையில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சியில் ஆளுநர் ஆர். என். ரவி கூறியுள்ளார்.

ஒன்றிய அரசு என்று அழைப்பதிலும், தமிழ்நாடு என்று அழைப்பதிலும் ஆளுநர் ரவிக்கும் - தமிழ்நாடு அரசுக்கும் இடையே சர்ச்சை ஏற்பட்டுள்ள நிலையில், நேற்றுமுன்தினம் தமிழ்நாடு என்று அழைப்பதைத் தவிர்த்த ஆளுநர் ஆர்.என். ரவி, நேற்று ஒன்றிய அரசு என்பதை அரசியலாக்குவது தவறு என்று பேசியிருக்கிறார்.

மேலும், ஹிந்தி கற்றுக் கொள்ள வேண்டும் என்பது கட்டாயமில்லை. எந்த மொழியும் கற்பது தவறில்லை. அது அந்த மக்களுடன் இணைந்து பணியாற்ற உதவும். இந்தியாவில் அதிக மக்கள் ஹிந்தி பேசுவதால் ஹிந்தி கற்றுக் கொள்வது பயன்படும் என்று கூறினார். (ஐ)

# ஆளுநருக்கு எதிராக பேச வேண்டாம் தி. மு. கவினருக்கு ஸ்டாலின் உத்தரவு!

சென்னை, ஜன. 11

சட்டப்பேரவையில் திமுக வைச்சேர்ந்த எந்த உறுப்பினரும் ஆளுநரை தாக்கி பேசக் கூடாது, ஆளுநருக்கு எதிராக சுவரொட்டிகள் ஒட்டக் கூடாது" என தி. மு. க. சட்டமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தில் முதல்வர் ஸ்டாலின் அறிவுறுத்தியுள்ளார்.

தி. மு. க. சட்டப்பேரவை உறுப்பினர்களின் ஆலோசனைக் கூட்டம் அந்தக் கட்சியின் தலைவர் மு. க. ஸ்டாலின் தலைமையில் சென்னை அறிவாலயத்தில் நேற்று நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் தி. மு. கவைச் சேர்ந்த அனைத்து சட்டப்பேரவை உறுப்பினர்களும் பங்கேற்றனர்.

இதில், சட்டப்பேரவையில் தி. மு. க. உறுப்பினர்களுக்கு பேச வாய்ப்பு வழங்கப்படும்



போது ஆளுநரை தாக்கி பேசக் கூடாது. குறிப்பாக தமிழக சட்டப்பேரவையின் முதல் கூட்டத்தொடரில் நேற்று முன்தினம் நடந்த சம்பவத்தை திரும்பவும் நினைவுகூரக் கூடாது. உறுப்பினர்கள் பேசும் போது ஆளுநர் உரையில் உள்ள விசயங்கள், வளர்ச்சித் திட்டங்கள், தொகுதியின் கோரிக்கைகளை மட்டுமே பேச வேண்டும். போன்ற அறிவுறுத்தல்களை வழங்கினார் என்று கூறப்படுகின்றது.

தமிழக சட்டப்பேரவைக் கூட்டம் ஜன.13ஆம் திகதி வரை நடைபெற இருக்கிற நிலையில், பேரவையில் பேச வாய்ப்பு கிடைக்கும் அமைச்சர்கள், புதிதாக பதவி ஏற்றுள்ள, துறைகள் மாற்றம் செய்யப்பட்டுள்ள அமைச்சர்கள் யாரும் சட்டப்பேரவையில் தேவையில்லாத விசயங்களை பேசக்கூடாது. அதேபோல யாரையும் தாக்கியோ, புகழ்ந்தோ பேசக்கூடாது. துறைசார்ந்த விசயங்களையும், தொகுதியின் விசயங்களையும் மட்டுமே நேரிடியாக பேச வேண்டும். அவையின் நேரத்தை வீணடிக்கும் விதத்தில் தேவையற்ற விஷயங்களை பேசக்கூடாது. இவைகளை தி. மு. க. கொறடா கண்காணிக்க வேண்டும் என்றும் ஸ்டாலின் அறிவுறுத்தியுள்ளார் என்று தகவல் வெளியாகியுள்ளது. (ஐ)

# அரசமைப்பின் தெளிவற்ற வார்த்தைகள் திருத்தப்படும் வரை '13' சாத்தியமில்லை

## சுட்டிக்காட்டுகின்றார் அமைச்சர் டக்ளஸ்



கொழும்பு, ஜன. 11

அரசியலமைப்பில் காணப்படும் தெளிவற்ற வார்த்தைப்பிரயோகங்களினால் உருவாகின்ற தடைகள் நீக்கப்படாவிட்டால், 13 ஆவது திருத்தச் சட்டத்தை திறம்பட அமுல்படுத்துவது சாத்தியமில்லை என்பதே கடந்த 30 வருடங்களுக்கும் மேலான மாகாண சபை முறைமையின் அனுபவமாக இருப்பதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளதுடன், மூன்று கட்டங்களாக 13ஆவது திருத்தச் சட்டத்தினை பூரணமாக அமுல்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வது நடைமுறைச் சாத்தியமானதாக இருக்கும் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளை நிறைவேற்றும் நோக்கில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் உருவாக்கப்பட்டுள்ள அமைச்சரவை உபகுழுவில் அங்கம் வகிப்பதுடன், குறித்த விவகாரம் தொடர்பாக ஜனாதிபதி மேற்கொண்டு வருகின்ற கலந்துரையாடல்களிலும் தொடர்ச்சியாக கலந்து கொண்டு வருகின்ற அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளித்துள்ள எழுத்துமூல ஆவணத்திலேயே இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அதாவது, ஜனாதிபதிக்கு இருக்கின்ற நிறைவேற்று அதிகாரத்தின் மூலமாக நிர்வாக அதிகாரங்களுக்கு ஊடாகவும் மத்திய அரசாங்கத்துக்கு எடுக்கப்பட்ட அதிகாரங்களை மீளவும் மாகாண அரசாங்கங்களிடம் கையளிப்பது முதலாவது கட்டம் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அதேபோன்று, 13 ஆவது திருத்தச் சட்டம் உருவாக்கப்படுவதற்கு முன்னர் உருவாக்கப்பட்ட சட்டங்களுள், 13 ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்துவதற்கு இடையூறாக இருக்கின்ற வற்றை ஆராய்ந்து, அவை 13 ஆவது திருத்தச் சட்டத்துடன் பொருந்தும் வகையில் சட்டத் திருத்தங்களை மேற்கொள்ளுதல் இரண்டாவது கட்டமாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மூன்றாவது கட்டமாக, 13 ஆவது திருத்தத்தின் சில விதிகளில் உள்ள தெளிவின்மையை நீக்குவதற்கும், தெளிவான முறையில் அதிகாரங்களை வரையறை செய்வதற்கும் மற்றும் ஒதுக்கீடு செய்வதற்கும், அத்தோடு சட்டமியற்றுதல், நிர்வாக, நீதித்துறை மற்றும் நிதி அதிகாரங்களை அரசாங்கத்தின் பல்வேறு அடுக்குகள் மூலம் பயன்படுத்துவதற்கான வரையறைகளை உருவாக்குவதற்குத் தேவையான அரசியலமைப்பு திருத்தம் மேற்கொள்ளுதல் போன்ற செயற்பாடுகளின் மூலம் 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்த முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், '13 ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்துவதில் இருந்து ஆரம்பித்து முன்னோக்கி நகர்வதன் மூலம் தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளைத் தீர்க்க முடியும் என்பதை ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி) மீண்டும் மீண்டும் கூறி வருகிறோம். இந்த நிலைப்பாட்டில் நாங்கள் நீண்ட காலமாக நிலையாக இருந்து வருகிறோம்.

சில அரசியல் கட்சிகள் தமது குறுகிய அரசியல் நிகழ்ச்சி நிரலுக்காக, 13ஆவது திருத்தம் தமிழர்களின் அபிலாஷைகளை நிறைவேற்றவில்லை என்று கூறினாலும், 1988ஆம் ஆண்டு இணைக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மாகாணத்துக்கு முதன் முறையாக நடைபெற்ற தேர்தல்களைத் தவிர, கிழக்கு மாகாணத்தில் இரண்டு தடவைகளும் வடக்கு மாகாணத்தில் ஒரு முறையும் நடைபெற்ற மாகாண சபைத் தேர்தலில் பெரும்பாலான அரசியல் கட்சிகளும் கலந்துகொண்டதுடன் மக்கள் ஆர்வத்துடன் வாக்களித்தனர்.

இது மாகாண சபை அமைப்பை ஏற்றுக்கொள்ளும் அனைவரினதும் விருப்பத்தை வெளிப்படுத்துகின்றது. மற்ற மாகாணங்களிலும் மக்கள் இப்போது இந்த முறைக்கு பழகிவிட்டனர்.

அதைத் தொடர்வதற்கு எந்த எதிர்ப்பும் இல்லை. 13 ஆவது திருத்தத்தின் ஊடான அதிகாரப் பகிர்வை சரியான முறையில் வரையறைப்படுத்தி அர்த்தமுள்ள முறையில் செயல்படுத்துவது ஒரு ஐக்கிய நாட்டுக்குள் பன்முகத்தன்மையையும் மற்றும் பன்மைத்தன்மையைக் கையாள்வதற்கான வழிமுறையையும் வலுப்படுத்தும்' என அமைச்சர் டக்ளஸ் கையளித்த எழுத்து மூல ஆவணத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)



# வவுனியா இந்துக் கல்லூரியின் அதிபர் நியமனத்துக்கு எதிர்ப்பு

வவுனியா, ஜன. 11

வவுனியா கோவில்குளம் இந்துக் கல்லூரிக்கு புதிய அதிபரை நியமிப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்து ஆர்ப்பாட்டமொன்று நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

பாடசாலையின் அதிபர் ஓய்வு பெற்றதையடுத்து புதிய அதிபரொருவர் நியமிக்கப்பட்டு நேற்று பதவியேற்க இருந்தார்.

எனினும் அந்த அதிபர் முன்பு கடமையாற்றிய பாடசாலையில் சிறுவர் துஷ்பிரயோகத்தில் ஈடுபட்டதாக தாம் அறிந்தமையால் மாணவர்களின் பாதுகாப்பு கருதி அவரைப் பாடசாலை அதிபராக ஏற்க முடியாது என தெரிவித்து பெற்றோர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது வேண்டாம் வேண்டாம் தகுதியற்ற அதிபர் வேண்டாம், மாணவர்களின் எதிர்காலத்தை அழிக்கும் அதிபர் வேண்டாம் போன்ற பதாதைகளை ஆர்ப்பாட்டக்காரர்கள் தாங்கியிருந்தனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் பாடசாலை பழையமாணவர்கள், பெற்றோர், பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

(அ)

# செலவுகளை 5 வீதத்தால் குறைக்குமாறு அமைச்சுக்களுக்கு ஜனாதிபதி பணிப்பு!

கொழும்பு, ஜன. 11

செலவுகளை ஐந்து வீதத்தால் குறைக்குமாறு அனைத்து அமைச்சரவை அமைச்சுக்களுக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பணிப்புரை விடுத்துள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்தன இந்த விடயத்தைக் கூறினார்.

நேற்று முன்தினம் அமைச்சரவைக் கூட்டத்தின்போது, 2023ஆம் ஆண்டுக்கான



வரவு-செலவுத்திட்டத்தின் ஊடாக மதிப்பிடப்பட்ட ஒதுக்கீட்டில், ஐந்து வீதத்தினால் செலவினங்களைக் குறைக்குமாறு ஜனாதிபதி விக்கிரமசிங்க அனைத்து அமைச்சுக்களுக்கும் பணிப்புரை விடுத்துள்ளார் எனவும் அவர் குறிப்பிட்டார்.

கடந்த வருடத்தில் ஏற்பட்ட தவறுகள் காரணமாக, அரச துறை ஊழியர்களின் சம்பளம் மற்றும் ஓய்வூதியக் கொடுப்பனவுகளை வழங்குவதற்குக் கூட நிதியை பெறுவதில் பல்வேறு சிரமங்களை எதிர் கொண்டுள்ளதாக ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

இதன்படி அனைத்து அமைச்சுக்களின் செலவுகளும் குறைந்தது ஐந்து வீதத்தால் குறைக்கப்படவேண்டும் என ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார் என அமைச்சர் பந்துல கூறினார்.

# வடமாகாண ஆளுநர் தலைமையில் மன்னாரில் விசேட கலந்துரையாடல்

மன்னார், ஜன. 11

மன்னார் மாவட்டத்தில் காணப்படும் பிரச்னைகள் தொடர்பில் ஆராயும் விசேட கலந்துரையாடல் வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா தலைமையில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை மன்னார் ஆயர் இல்லத்தில் இடம்பெற்றது.

குறித்த கலந்துரையாடலில் மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை,வடக்கு மாகாண பிரதம செயலாளர், மன்னார் மற்றும் வுனியா மாவட்டங்களைச் சேர்ந்த பிரதேச செயலகங்களின் பிரதேச செயலாளர்கள், பங்குத் தந்தையர்கள், மாகாண சபைத் திணைக்களத் தலைவர்கள் கலந்து கொண்டனர்.

கலந்துரையாடலில் மன்னார் மற்றும் வவுனியா மாவட்டங்களில் காணப்படுகின்ற பிரச்னைகள் தொடர்பாகவும் முக்கியமாக காணிப் பிரச்னை தொடர்பாகவும் வனவளத் திணைக்களம் மற்றும் வனஜீவராசிகள் திணைக்களத்தினால் எல்லையிடப்பட்டுள்ள காணிகள் தொடர்பாகவும் விரிவாக ஆராயப்பட்டது.



இரண்டு மாவட்டங்களிலும் பிரதேச செயலாளர்களினால் தங்களது பிரதேசங்களில் காணப்படுகின்ற பிரச்னைகள் தொடர்பாகவும் அவர்களது பிரதேசத்தில் செயல்படுத்தப்படவேண்டிய மற்றும் செயல்படுத்தப்பட்டுள்ள திட்டங்கள் தொடர்பாகவும் இதன்போது விரிவாக ஆராயப்பட்டது.

பிரதேச செயலாளர்களூடாக உணவு உற்பத்தியை எவ்வாறு அதிகரிப்பது தொடர்பாகவும், உணவு உற்பத்தி போசாக்கு மட்டத்தை மக்களிடையே உயர்த்துவதற்கான வழிமுறைகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது. (அ)

# விமான நிலையத்தில் உயிரிழந்தார் பயணி

கொழும்பு, ஜன. 11

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்திற்கு வந்த பயணி ஒருவர் திடீரென உயிரிழந்த சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

நேற்று செவ்வாய்க்கிழமை காலை கட்டாரில் இருந்து வந்த குறித்த நபர் வருகை முனையத்தில் தரையில் விழுந்து உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கனடாவில் வசிக்கும் 55 வயதான குறித்த நபர் கொழும்பிலுள்ள தனது உறவினர்களை சந்திப்பதற்காக இலங்கைக்கு வருகை தந்துள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.

(அ)

# இலங்கை - இந்தியா இடையில் மின்சார பரிமாற்ற இணைப்பு?

## உயர் மட்டத்தில் இரு தரப்பு பேச்சு

கொழும்பு, ஜன. 11

**இரண்டு நாடுகளுக்கிடையிலும் மின்சாரப் பரிமாற்ற இணைப்பை அமைப்பதற்காக இந்தியாவும் இலங்கையும் 'உயர் மட்டத்தில்' இருதரப்பு பேச்சுவார்த்தைகளுக்கு திட்டமிடுவதாக இந்திய செய்தித்தளம் ஒன்று கூறியுள்ளது.**

இந்தியாவின் பொதுத்துறை நிறுவனமான 'பவர் கிரிட் கோர்ப்பரேஷன் ஒவ் இந்தியா' ஏற்கனவே முன்மொழியப்பட்ட திட்டத்திற்கான பூர்வாங்க அறிக்கையை தயாரித்துள்ளது.

கடந்த ஆண்டு இலங்கையில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியின் பின்னணியில், மின்சார பற்றாக்குறையை முடங்கியதன் பின்னணியில் ஆரம்பப் பேச்சுவார்த்தை இடம்பெற்றுள்ளது.

இலங்கையில் உள்ள தனது தூதரகத்தின் மூலம் இந்திய அரசாங்கம் தனது முயற்சிகளைத் தொடர்கிறது.

இலங்கையின் மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சும் இந்திய தூதரகத்துடன் தொடர்பில் உள்ளது.

இந்தநிலையில் தற்போது உயர் அரசியல் மட்டத்தில் பேச்சுவார்த்தை நடத்தப்பட வேண்டும் என்று இரு தரப்பினரும் கருதுவதாக இந்திய செய்தித்தளம் கூறுகிறது.

எனினும் இது தொடர்பில் இந்திய மத்திய மின்சார அமைச்சகம், வெளியுறவு அமைச்சு, புதுடில்லியில் உள்ள இலங்கை உயர்ஸ்தானிகரகம் மற்றும் பவர் கிரிட் நிறுவனம் ஆகியவற்றின் கருத்துக்கள் எவையும் இதுவரை வெளியாகவில்லை. (அ)



# ரயில் ஊழியர்கள் நான்கு பேர் நீர்த்தாங்கி மீதேறி போராட்டம்

கொழும்பு, ஜன. 11

இரத்மலானை ரயில் தளத்தில் உள்ள நீர்த்தாங்கி மீதேறி 4 ரயில் ஊழியர்கள் போராட்டமொன்றை முன்னெடுத்தனர்.

ரயில்வே திணைக்களத்தின் 160 ஊழியர்களுக்கு நிரந்தர நியமனங்களை வழங்காமல், 3,000 பல்நோக்கு அபிவிருத்திப் பணியாளர்களை நிரந்தர அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்வதற்கு எதிர்ப்பு தெரிவித்தே அவர்கள் இந்தப் போராட்டத்தை மேற்கொண்டதாக தெரிவிக்கப்பட்டது. (அ)



# நீதி அமைச்சரிடம் கையளிக்கப்பட்ட தேசிய பாதுகாப்புச் சட்ட அறிக்கை

கொழும்பு, ஜன. 11

பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்கி தேசிய பாதுகாப்பை உறுதி செய்வதற்கான தேசிய பாதுகாப்பு சட்ட மூலத்தை உருவாக்குவதற்கான நிபுணர் குழுவினால் உருவாக்கப்பட்ட தேசிய பாதுகாப்பு சட்ட வரைவு அமைச்சரிடம் கையளிக்கப்பட்டது.

மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் ஜனாதிபதி சட்டத்தரணி நெரில் புள்ளே மற்றும் ஜனாதிபதி சட்டத்தரணி நளின் டி இந்திரதிஸ்ஸ ஆகியோரின் இணைத்தலைமையில் இந்த நிபுணர் குழு நியமிக்கப்பட்டிருந்தது.

இந்த நிகழ்வில், சட்டமா அதிபர் ஜனாதிபதி சட்டத்தரணி சஞ்சய் ராஜரத்தினம், நீதியமைச்சின் செயலாளர் வசந்த பெரேரா, வரைவுத் திணைக்களத்தின் மேலதிக வரைவு ஆசிரியர் டி.டி. குலசேன, நீதியமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் ஹிரண்ய பெரேரா, உதவிச் செயலாளர்கள் மற்றும் அமைச்சின் சிரேஷ்ட அதிகாரிகள் கலந்துகொண்டனர். (அ)

# கொழும்பு விபசார விடுதிகளில் கைதாகும் வடக்கு யுவதிகளின் எண்ணிக்கை உயர்வு!

கொழும்பு, ஜன. 11

இளம் யுவதிகள் வடமாகாணத்திலிருந்து கொழும்புக்கு சென்று விபசாரத்தில் ஈடுபடும் போக்கு அதிகரித்துள்ளதாக சிறுவர் மற்றும் பெண்கள் பணியகம் எச்சரித்துள்ளது.

அண்மையில் கொழும்பு கோட்டை, மஹரகம மற்றும் மருதானை பிரதேசங்களிலுள்ள விடுதிகளை சோதனையிட்டு 19 பெண்களை பொலிஸ் சிறுவர் மற்றும் மகளிர் பணியகம் கைது செய்துள்ளது.

ஆயுர்வேத சிகிச்சை நிலையங்கள், மசாஜ் நிலையங்கள் என்ற போர்வையிலும், இரகசிய விபசார விடுதிகளாகவும் இவை இயங்கின.

கைதான 19 பெண்களில் 11 பேர் வடமாகாணத்தை சேர்ந்தவர்கள் என்பது தெரிய வந்தது.

அவர்கள் யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா பகுதிகளைச் சேர்ந்தவர்கள்.

தாங்கள் முதலில் கொழும்புக்கு வந்து ஆடைத் தொழிற்சாலைகளில் வேலை செய்ததாகவும், தமக்குக் கிடைக்கும் சம்பளம் போதாதென்று விபசாரத்தில் ஈடுபட்டதாகவும் பெண்கள் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளனர். (அ)

# சமுர்த்திக் கொடுப்பனவுகள் ஓரிரு வாரங்கள் தாமதமாகும்

## அமைச்சர் பந்துல தகவல்



கொழும்பு, ஜன. 11

சமுர்த்திக் கொடுப்பனவுகளை வழங்குவது ஓரிரு வாரங்கள் தாமதமாகலாம் என அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

நிதிப் பற்றாக்குறை காரணமாக சமுர்த்திக் கொடுப்பனவுகள் தாமதப்படுத்தப் ஸ்ரீபடுவதாக தமக்கு அறிவிக்கப்பட்டுள்ள தாக அவர் கூறினார்.

கடந்த ஆண்டு பொருளாதாரத்தில் ஏற்பட்ட வீழ்ச்சி காரணமாக அரசாங்கத்தின் வருமானம் வெகுவாக குறைந்துள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

எனவே அரச ஊழியர்களின் மாதாந்தச் சம்பளத்தை வழங்குவதற்குக்கூட நிதியை தேடுவதில் அரசாங்கம் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார். (அ)

# சபரிமலைக்கு சென்றவர் கட்டுநாயக்கவில் கைது!

கொழும்பு, ஜன. 11

சபரிமலை கோவிலுக்குச் செல்வதற்காக கட்டுநாயக்க விமான நிலையத்துக்குச் சென்ற ஒருவர் விமான நிலையப் பாதுகாப்பு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட நபரின் பொதி ஒன்றில் ரி-56 ரக துப்பாக்கியின் தோட்டா காணப்பட்டதையடுத்தே சந்தேகத்தின் பேரில் இவர் கைது செய்யப்பட்டார்.

சந்தேக நபர் மேலதிக விசாரணைகளுக்காக கட்டுநாயக்க விமான நிலைய பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டதாக விமான நிலையத்தின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

சந்தேக நபர் 47 வயதான ஹற்றனை வசிப்பிடமாக கொண்டவர்.

மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின்போது வத்தளை பிரதேசத்தில் அமைந்துள்ள இரும்பு விற்பனை நிலையம் ஒன்றில் இரும்புகளை சந்தேக நபர் கொள்வனவு செய்து அவற்றை இந்தியாவுக்கு கொண்டு சென்று விற்பனை செய்ய விருந்தமை தெரியவந்துள்ளது. (அ)

# பெருந்தோட்டங்களில் ஆங்கில வழி பகல்நேர பராமரிப்பு நிலையங்கள்



கொழும்பு, ஜன. 11

பெருந்தோட்ட மக்களுக்காக, ஆங்கில மொழிமூலம் இயங்கும் பகல்நேர பராமரிப்பு நிலையங்களை ஆரம்பிக்க தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

பெருந்தோட்டத் தொழிலாளர்கள் இலங்கைக்கு வந்து 200 வருடங்கள் பூர்த்தியானதை முன்னிட்டு நடத்தப்படும் தொடர் நிகழ்ச்சிகளின் பிரகாரம் ஆங்கில மொழிமூல பகல்நேர பராமரிப்பு நிலையங்கள் ஆரம்பிக்கப்பட உள்ளன.

பெருந்தோட்ட தொழிலாளர்களின் நலன் தொடர்பில் விசேட கவனம் செலுத்துமாறு தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார பணிப்புரை விடுத்துள்ளார்.

அதன்படி, இந்த ஆங்கில வழி பகல்நேர பராமரிப்பு நிலையங்கள் தொடங்கப்படவுள்ளன.

நாடளாவிய ரீதியில் புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் பிள்ளைகளுக்காக ஆங்கில மொழிமூல பகல்நேர பராமரிப்பு நிலையங்களை ஆரம்பிக்கும் விசேட திட்டத்தின் முன்னோடி செயற்திட்டங்கள் ஜனவரி மாதத்துக்குள் நடைமுறைப்படுத் தப்படவுள்ளதுடன், இதனை பெருந்தோட்ட மக்களுக்காகவும் விரிவுபடுத்த திட்டமிடப்பட்டுள்ளது. (அ)

# அம்பாந்தோட்டையில் அமையவுள்ள பெற்றோலிய சுத்திகரிப்பு நிலையம்

கொழும்பு, ஜன. 11

அம்பாந்தோட்டைப் பிரதேசத்தில் ஏற்றுமதியை நோக்காகக் கொண்ட பெற்றோலிய சுத்திகரிப்பு மற்றும் உற்பத்திப் பொருட்கள் தயாரிப்பு நிலையத்தை நிறுவுவதற்கு அதிக ஆற்றல்வளம் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

குறித்த ஏற்றுமதி வாய்ப்புக்களைப் பயன்படுத்துவதற்காக பல்வேறு தரப்பினர்கள் மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் ஆர்வம் காட்டுகின்றனர்.

அதற்கமைய, அம்பாந்தோட்டை பிரதேசத்தில் பெற்றோலிய சுத்திகரிப்பு நிலையத்தை நிறுவுவதற்றுப் பொருத்தமான முதலீட்டாளர் ஒருவரைத் தெரிவு செய்வதற்காக விருப்பக் கோரல் அறிவித்தலை வெளியிடுவதற்கும், அவற்றில் அடிப்படைத் தகைமைகளைப் பூர்த்தி செய்கின்ற முதலீட்டாளர்களின் விவரத்துடன் கூடிய உத்தேசத்திட்டத்தை பெற்றுக்கொள்வதற்கும் மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (அ)

# சட்டத்தின் ஆட்சியை சீர்குலைக்கிறது அரசு

## கர்தினால் மல்கம் ரஞ்சித் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜன. 11

தற்போதைய அரசாங்கம் நாட்டில் சட்டத்தின் ஆட்சியை சீர்குலைத்து வருவதாக கர்தினால் மல்கம் ரஞ்சித் குற்றம் சுமத்தியுள்ளார் என அருட்தந்தை சிறில் காமினி தெரிவித்துள்ளார்.

சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் நிலாந்த ஜயவர்தனவுக்கு இலங்கை பொலிஸின் உயர் பதவியை வழங்கும் முயற்சி தொடர்பில் கர்தினாலின் கருத்தை அவர் வெளிப்படுத்தியுள்ளார். அதன்படி, உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களின் உண்மை வெளி வருவதைத் தடுப்பதற்காக சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் நிலந்த ஜயவர்தனவுக்கு பாதுகாப்பு மற்றும் சலுகைகள் வழங்கப்படுவதாக கர்தினால் மல்கம் ரஞ்சித் குற்றம் சுமத்தியுள்ளதாக அருட்தந்தை சிறில் காமினி சுட்டிக்காட்டியுள்ளார்.

நிலந்த ஜயவர்தன அண்மையில் சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபராக நியமிக்கப்பட்டார். அதேவேளை, அவர் அடுத்த பொலிஸ் மா அதிபராக நியமிக்கப்படுவார் எனத் தகவல்களும் வெளியாகி வருகின்றன.

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்கள் குறித்து முன்கூட்டியே தகவல் தெரிந்திருந்தும், அதனை முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபாலவுக்கு தெரிவிக்கவில்லை என்ற குற்றச்சாட்டு இவர் மீது சுமத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

### செட்டிகுளம் பிரதேச செயலர் பிரிவில்

# பொருளாதார நெருக்கடியால் 931 குழந்தைகளுக்கு பாதிப்பு

வவுனியா, ஜன. 11

வவுனியா, செட்டிகுளம் பிரதேச செயலக பிரிவில் பொருளாதார நெருக்கடி காரணமாக 6465

குடும்பங்களும், 931 குழந்தைகளும் பாதிக்கப்பட்டுள்ளன.

இந்த விடயத்தை வவுனியா மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் தி.திரேஸ்குமார் தெரிவித்தார்.

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் மூலம் பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்டோர் தொடர்பில் கேட்கப்பட்ட போதே அவர் அதில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதில் மேலும், பொருளாதார நெருக்கடி காரணமாக வவுனியா, வெண்கல செட்டிகுளம் பிரதேச செயலக பிரிவில் 6465 குடும்பங்கள் பாதிப்படைந்துள்ளன.

அத்துடன், 931 குழந்தைகளும் பாதிக்கப்பட்டுள்ளனர். மேலும் 213 கர்ப்பிணித் தாய்மாரும் பாதிக்கப்பட்டுள்ளதாக குறித்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# முல்லைத்தீவைச் சேர்ந்த குடும்பஸ்தர் வவுனியா பொலிஸாரினால் கைது!

வவுனியா, ஜன. 11

முல்லைத்தீவைச் சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், அவரிடம் இருந்து நகைகளும் மீட்கப்பட்டுள்ளதாக வவுனியா குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா - திருநாவற்குளம் பகுதியில் உள்ள வீடொன்றினுள் கடந்த 3ஆம் திகதி புகுந்து சுமார் 5 இலட்சம் ரூபா பெறுமதியான நகைகள் திருடப்பட்டுள்ளதாக வீட்டு உரிமையாளரால் வவுனியா குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

குறித்த முறைப்பாட்டுக்கு அமைவாக பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர்.

விசாரணைகளின் அடிப்படையில் முல்லைத்தீவு பகுதியைச் சேர்ந்த 44 வயதுடைய குடும்பஸ்தர் ஒருவர் சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்யப்பட்டார்.



அத்துடன் திருடப்பட்டதாக கருதப்படும் காப்பு, சங்கிலி உள்ளிட்ட நகைகள் அவரிடமிருந்து மீட்கப்பட்டுள்ளன.

இதனையடுத்து மேலதிக விசாரணைகளின் பின் குறித்த நபரை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக வவுனியா குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# விக்கியுடன் ரெலோ திடீரெனச் சந்திப்பு

யாழ்ப்பாணம், ஜன. 11

தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவர் சி.வி.விக்கினேஸ்வரனுக்கும், தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் பிரதிநிதிகளுக்கும் இடையிலான சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

யாழ்ப்பாணம் கோவில் வீதியில் உள்ள சி.வி.விக்கினேஸ்வரனின் இல்லத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை இந்த சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

சந்திப்பில் தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் ஊடகப் பேச்சாளர் குருசாமி சுரேந்திரன், வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் சபா.குகதாஸ், யாழ் மாநகர பிரதி முதல்வர் து.ஈசன் உள்ளிட்டவர்கள் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# வவுனியா மணிபுரம் மக்கள் கவனவீர்ப்பு போராட்டத்தில்!



வவுனியா, ஜன. 11

வவுனியா பிரதேச செயலகத்துக்குட்பட்ட மரக்காரம்பளை கிராம சேவகர் பிரிவில் பால்மா விநியோகத்தில் முறைகேடு இடம்பெற்றுள்ளதாக தெரிவித்து நேற்று செவ்வாய்க்கிழமை இப்பகுதி மக்கள் கவனயீர்ப்புப் போராட்டமொன்றில் ஈடுபட்டனர்.

மரக்காரம்பளை கிராம சேவகர் அலுவலகம் அமைந்துள்ள மணிபுரம் கிராமத்தில் கிராம சேவகர் அலுவலகத்துக்கு முன் அமைதியான முறையில் போராட்டம் இடம்பெற்றது.

இதன்போது கருத்து தெரிவித்த மக்கள், அண்மையில் கிராம சேவகரால் பால்மா பைக்கெற்றுகள் வழங்கப்பட்டிருந்தன. இவை பக்கச்சார்பான முறையில் வழங்கப்பட்டதுடன் தகுதியற்றநபர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளன.

பல குழந்தைகள் போசாக்கின்றியுள்ள நிலையில் கிராம சேவையாளர் பால் மாடுகளும் வாகனங்களும் வைத்துள்ளவர்களுக்கு பால்மா பைக்கெற்றுகள் வழங்கியுள்ளார். இது தொடர்பில் கிராம சேவகரிடம் கேட்டால் பொறுப்பற்ற விதத்தில் பதில் கூறுகின்றார் என தெரிவித்தனர்.

இவ்விடயம் தொடர்பில் பிரதேச செயலாளரிடம் கேட்டபோது, வவுனியா பிரதேச செயலர் பிரிவில் 36000 குடும்பங்கள் உள்ளன. இதில் 6000 குடும்பங்கள் மிக வறுமைக்கோட்டுக்குட்பட்ட குடும்பங்களாக உள்ளன.

இந்நிலையில் எமக்கு 1730 குடும்பங்களுக்கு வழங்குவதற்குத்தான் பால்மா பொதி கிடைத்தது.

இதில் வறுமையான குடும்பங்களுக்கு வழங்குமாறு கிராம சேவையாளர்களுக்கு அனுமதி வழங்கியுள்ளோம்.

இதில் முறைப்பாடு தெரிவிப்பவர்கள் உண்மையிலேயே வறுமையானவர்களாயின் அதைப்பற்றி தற்போது கூற முடியாது. அவர்கள் என்னிடம் முறைப்பாட்டை தந்தால் அவர்கள் தகுதியானவர்களாக இருந்தும் கிடைக்காவிட்டாலும் தகுதியற்றவர்களுக்கு கிடைத்தாலும் நடவடிக்கை எடுப்போம் - என்றார். (அ)

# அல்-கெய்டாவுக்கு நிதியுதவியளித்த இலங்கை இரத்தினக்கல் நிறுவனம்!

கொழும்பு, ஜன. 11

அல்-கெய்டா அமைப்புக்கு ஆதரவாக செயற்பட்டதாக கூறப்படும் அஹமட் லுக்மான் தாலிப்பின் வருமானத்தை ஈட்டிக் கொடுப்பதில் முக்கிய பங்கு வகித்த இலங்கையின் இரத்தினக் கற்கள் நிறுவனம், தாலிப் மீது அமெரிக்காவினால் தடை ஏற்படுத்தப்பட்டு அவர் கைது செய்யப்பட்ட பிறகும் வணிகத்தைத் தொடர்ந்ததாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

ஆராய்ச்சி மற்றும் தரவுப் பகுப்பாய்வு நிறுவனம் ஒன்று இந்த தகவலை வெளியிட்டுள்ளது.

தாலிப்புடன் அவருக்குச் சொந்தமான ஒரு இரத்தினக் கல் வணிகம், 2020 ஒக்ரோபரில் அமெரிக்க திறைசேரியால் தடை செய்யப்பட்டது. அதைத் தொடர்ந்து அவர் 2021 இல் அவுஸ்திரேலிய பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

இந்த நிலையில் இலங்கையை தளமாகக் கொண்ட ஒரு இரத்தினக்கல் வர்த்தக நிறுவனம், அல்-கெய்டாவுக்கு நிதியளிக்கும் தாலிப்புக்கு வருவாயை ஈட்டிக்கொடுப்பதில் முக்கிய பங்குதாரராக இருந்தது என்று கரோன் என்ற ஆராச்சி மற்றும் தரவு பகுப்பாய்வு நிறுவனம் கூறியுள்ளது.

இந்த வர்த்தக நிறுவனம் இலங்கையின் தென்மேற்கு கரையோர பிரதேசத்தில் வசிக்கும், முகமது ஹாரிஸ் நிஸார் என்பவரின் முகவரியில் பதிவு செய்யப்பட்டுள்ளது. கடந்த நவம்பர் 9 ஆம் திகதி இந்நபருக்கு அமெரிக்காவினால் தடை விதிக்கப்பட்டது.

இலங்கையை தளமாகக் கொண்ட இந்த இரத்தினக் கல் வர்த்தக நிறுவனம் 100,000 அமெரிக்க டொலர்களுக்கும் அதிகமான மதிப்புள்ள விலைமதிப்பற்ற இரத்தினக் கற்களை அவுஸ்திரேலியாவில் உள்ள தாலிப்பின் நிறுவனத்துக்கு அனுப்பியுள்ளது.

அத்துடன், இலங்கையில் அவுஸ்திரேலிய தாலிப் மற்றும் இலங்கையின் நிஸார் ஆகியோரின் வணிகக் கொடுக்கல் வாங்கல்கள் 2018 முதல் வருடத்திற்கு கிட்டத்தட்ட 200,000 டொலர்களை லாபமாக ஈட்டியுள்ளன.

இந்தநிலையில் 2021இல் அமெரிக்க அரசாங்கத்தால் தடை செய்யப்பட்ட பின்னரும், இந்த இரத்தினக்கல் நிறுவனம், வாடிக்கையாளர்களுக்கு பொருட்களை அனுப்பி வந்துள்ளது.

தாலிபின் அல்-கெய்டா வலையமைப்பின் சர்வதேச பாதை தென் அமெரிக்கா வரை நீண்டுள்ளது.

அல்-கெய்டாவின் நிதியாளர் அஹ்மத் தாலிப் பிரேசிலை தளமாகக் கொண்ட நிறுவனம் ஒன்றின் நிர்வாகப் பங்காளியாகவும் செயற்பட்டார் என்று கண்டறியப்பட்டுள்ளது. (அ)



# குறைந்த விலையில் ஐ போன்கள் விற்பனை மோசடி

கொழும்பு, ஜன. 11

குறைந்த விலையில் ஐபோன்களை வழங்குவதாக கூறி 500 பேரிடம் இருந்து 50 மில்லியன் ரூபாவை மோசடி செய்த ஒருவர் கொழும்பு மோசடி விசாரணைப் பிரிவின் அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு 15, மாதம்பிட்டிய பகுதியைச் சேர்ந்த 29 வயதான சந்தேகநபர் இருவரினால் செய்யப்பட்ட முறைப்பாடுகளின் அடிப்படையில் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு பாதிக்கப்பட்டவர்கள் தங்களின் முறைப்பாடுகளில், சந்தேகநபர் 7.5 மில்லியன் ரூபாவிற்கு மேல் மோசடி செய்ததாக குற்றம்சாட்டியுள்ளனர்.

சந்தேகநபருக்கு எதிராக கொள்ளுப்பிட்டி பொலிஸில் மாத்திரம் 500க்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் இருப்பதாக கொழும்பு மோசடி விசாரணைப் பணியகம் தெரிவித்துள்ளது. (அ)

# ஆளுநர் ரவி, முதலமைச்சர் ஸ்டாலின்
# மரபுகளை மீறியது யார்?

சிவகுமார் ராஜகுலம்





தமிழ்நாடு சட்டப்பேரவையில் திங்களன்று இடம்பெற்ற நிகழ்வுகளால் மரபு மீறல் என்ற வார்த்தைகளே மாநில அரசியலில் ஓங்கி ஒலிக்கிறது. மரபுகளை கண்டிப்பாக பின்பற்றியே தீர வேண்டுமா? மரபுகள் இதுவரை மீறப் பட்டதே இல்லையா? 1995ஆம் ஆண்டு அப்போதைய ஆளுநர் சென்னாரெட்டி - முதல்வர் ஜெயலலிதா மோதலின் போது நடந்தது என்ன?

உலகெங்கும் ஜனநாயக நாடுகளில் அரசியலிலும், அரசு நிர்வாகத்திலும் சில நடைமுறைகள் மரபுகளாக வழுவாமல் கடைபிடிக்கப்படுகின்றன. இந்தியாவும் அதற்கு விதிவிலக்கு அல்ல.

தேசிய அளவில் 60 ஆண்டுகளுக்குப் பிறகு அமைந்த பிரதமர் மோடி தலைமையிலான வலுவான வலதுசாரி அரசு, முந்தைய அரசுகள் கடைபிடித்த நடைமுறைகளை மாற்ற முயலும் போதெல்லாம், மரபு மீறல் என்ற குற்றச்சாட்டுகள் எழுவது வாடிக்கை. அந்த வரிசையில், தமிழ்நாட்டிலும் மரபு மீறல் என்ற புகார்கள் அண்மைக்காலமாக அதிகமாகி வருகின்றன.

குறிப்பாக, தமிழ்நாட்டில் திமுக ஆட்சி, அதிகாரத்தைக் கைப்பற்றிய சிறிது காலத்தில் ஆளுநராக ஆர்.என். ரவி பதவியேற்ற பிறகு மரபு மீறல் குற்றச்சாட்டுகள் தொடர்ந்து எழுகின்றன. ஆளுநர் அரசியல் பேசுகிறார், அரசியல் சாசன பதவியில் இருந்து கொண்டு ஆர்.எஸ்.எஸ்.காரராகவே செயல்படுகிறார் என்பன போன்ற புகார்களை எதிர்க்கட்சிகள் அவ்வப்போது எழுப்பி வருகின்றன.



இந்த நிலையில்தான், ஆண்டின் தொடக்கத்தில் கூடிய தமிழ்நாடு சட்டப்பேரவையில் அரசு தயாரித்து அளித்த உரையில் சில குறிப்பிட்ட பகுதிகளை ஆளுநர் ஆர்.என்.ரவி தவிர்த்திருப்பது சலசலப்புக்கு வித்திட்டிருக்கிறது. ஆளுநநரின் செயல் மரபு மீறல் என்று ஆளும் தரப்பும், அவையில் ஆளுநர் இருக்கும் போதே அவருக்கு எதிரான தீர்மானத்தை முன்மொழிந்த முதல்வர் மு.க.ஸ்டாலின் மரபுகளை மீறிவிட்டதாக அதிமுகவும் குற்றம்சாட்டுகின்றன. இதையடுத்து, தமிழ்நாடு சட்டப் பேரவையில் எத்தகைய மரபுகள் கடைபிடிக்கப்படுகின்றன? மரபுகள் இதுகாறும் மீறப்பட்டதே இல்லையா? மரபு மீறல்கள் மிகப்பெரிய ஆபத்துக்கு வித்திடுமா? என்ற கேள்விகள் இயல்பாகவே எழுகின்றன.

மரபு மீறல் குறித்த புகார்கள் குறித்து திமுக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதியிடம் பேசுகையில், "அம்பேத்கர் வகுத்தளித்த அரசியல் சாசனத்தில் ஆளுநருக்கென சில அதிகாரங்கள் தரப் பட்டுள்ளன. அதன்படி, மாநில அரசின் கொள்கைகளை மட்டுமே ஆளுநர் பிரதிபலிக்க வேண்டும். ஆளுநரின் இந்த முடிவுக்கு என்ன காரணம்? அவர் இன்னும் ஆளுநராக நீடிப்பது நியாயமா?" என்று கேள்வி எழுப்பினார்.

அவர் மேலும் கூறுகையில், "ஆளுநரைப் போலவே குடியரசுத் தலைவரும் விபரீத முடிவை எடுத்தால், மத்திய அரசின் கொள்கைகளுக்கு மாறாக செயல்பட்டால் 130 கோடி மக்களின் எதிர்காலம் என்னவாகும்? இதனை கருத்தில் கொண்டு குடியரசுத் தலைவரும், மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷாவும் ஆளுநர் ஆர்.என்.ரவி விஷயத்தில் சிந்தித்து முடிவெடுக்க வேண்டும்" என்று வலியுறுத்தினார்.

**மரபை சரியாக பின்பற்றவில்லை என்பது முறையாகாது**

அதிமுகவைச் சேர்ந்த முன்னாள் துணை சபாநாயகரும், இன்றைய சட்டமன்ற உறுப்பினருமான பொள்ளாச்சி ஜெயராமனிடம் கேட்ட போது, மரபுகளை மீறுவது சரியல்ல என்றார். ஆனால், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தான் மரபுகளை மீறியதாக அவர் குற்றம்சாட்டினார்.

"பல ஆண்டுகளாக வழிவழியாக பின்பற்றப்படுவதுதான் மரபு. அதை சரியாக செய்யவில்லை என்பது முறையாகாது. அரசு எழுதி கொடுத்ததை அப்படியே படிக்க ஆளுநர் ஒன்றும் பள்ளி மாணவர் இல்லையே. சட்டமன்ற உரையை பொறுத்தவரை ஓரளவுக்கு ஆளுநரின் முடிவே இறுதியானது. மற்றபடி இவர்கள் கொடுத்ததில் எதை படிக்க ஒப்புக் கொண்டார், எதை ஒப்புக் கொள்ளவில்லை என்பது நமக்கு தெரியாது. 90வீமம் சரியாக இருந்தால் 10 வீத விஷயங்களை பொருட்படுத்த மாட்டார்கள்" என்று அவர் கூறினார்.

**இது மரபு மீறல் அல்ல; விதிமீறல்**

மரபு மீறல் குறித்து எழுந்துள்ள சர்ச்சை குறித்து மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் நாடாளுமன்ற உறுப்பினர் சு.வெங்டேசனிடம் கேள்விகளை முன்வைத்த போது, "மரபு மீறல் என்பது பொதுவான வார்த்தை, உண்மையில் இது விதிமீறல்," என்றார்.

"ஆளுநரின் செயல்பாடு விதிமீறல், நேரடியாக சட்ட மீறல். ஆளுநர் ஆர். என்.ரவி தனி நபராக சொந்தக் கருத்துகளை பேசலாம். ஆனால், ஓர் ஆளுநராக அதனை செய்யக் கூடாது. தமிழ்நாட்டு மக்களின் பிரதிநிதிகள் கூடியுள்ள சட்டப்பேரவையில் அரசின் குரலாகவே அவர் ஒலிக்க வேண்டும். அவரது சொந்த கருத்துகளை தெரியப்படுத்தும் இடம் அதுவல்ல" என்றார் அவர் காட்டமாக.

இதற்கு மாறாக, பாரதிய ஜனதா தேசிய செயற்குழு உறுப்பினரும், எம்.எல்.ஏ.வுமான வானதி சீனிவாசனோ, "ஆளுநர் மக்களால் தேர்ந்தெடுக்கப் பட்ட மத்திய அரசின் பிரதிநிதி," என்கிறார்.



"தமிழக சட்டப்பேரவையில் மரபுப்படி ஆளுநர் உரையாற்றியுள்ளார். அரசியல் சாசனம் அவருக்கு அளித்த கடமைகளின்படியே செயல்பட்டு வருகி றார். ஆளுநர் பதவியை பா.ஜ.க அரசு புதிதாக உருவாக்கவில்லை. முன்கூட் டியே திட்டமிட்டு, கூட்டணி கட்சிகளை ஏவி விட்டு, ஆளுநரை அவமதித்துள்ளனர்," என்று குற்றம்சாட்டியுள்ளார்.

**வாஜ்பாய் அரசு நியமித்த கமிஷன் பரிந்துரைகளை செயல்படுத்துக**

விடுதலைச் சிறுத்தைகள் கட்சி நாடாளுமன்ற உறுப்பினரும், எழுத்தாளருமான ரவிக்குமாரிடம் மரபு மீறல் சர்ச்சை குறித்து கருத்து கேட்டோம். "கோயிலுக்குள் செருப்பு அணிந்து செல்லக் கூடாது என்பது காலம் காலமாக நாம் கடைபிடிக்கும் பழக்கம். மரபுகளில் ஒன்று. அதற்காக, கோயிலுக்குள் செருப்பு அணிந்து செல்லும் ஒருவரை நாம் தண்டிக்க முடியாது, கண்டிக்க மட்டுமே முடியும்" என்றார் அவர்.



"1970-களில் கருணாநிதி ஆட்சிக் காலத்தில் அமைக்கப்பட்ட சர்க்காரிய கமிஷன், ஆளுநரை தேர்வு செய்யவும், தகுதிகளை நிர்ணயிக்கவும் குழு ஒன்றை அமைப்பதோடு, மசோதாக்களுக்கு ஒப்புதல் தர கால நிர்ணயம் செய்யவும் பரிந்துரை செய்திருந்தது. அதற்கும் மேலாக, வாஜ்பாய் அரசு அமைத்த வெங்கடாச்சலையா கமிஷனோ, ஆளுநருக்கு மசோதாவை அனுப்பும் நடைமுறையையே ரத்து செய்ய பரிந்துரைத்தது." என்று ரவிக்குமார் சுட்டிக்காட்டினார்.

"ஆளுநரின் நடவடிக்கை சட்ட விரோத செயல். ஆளுநர்களின் செயல்பாடு குறித்து விவாதிக்க பா.ஜ.க. அல்லாத மாநில முதலமைச்சர்களின் கூட்டத்திற்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஏற்பாடு செய்ய வேண்டும். மாநில சுயாட்சியை எப்போதும் ஓங்கி ஒலிக்கும் திமுகவே, அதற்கான முன்னெடுப்புகளை முன்னின்று செய்ய வேண்டும்," என்று அவர் உறுதியுடன்.

**சென்னாரெட்டி - ஜெயலலிதா மோதல்**

"ஆளுநர் உரையில் சில பகுதிகள் விடுபடுவது இதுவே முதல் முறையல்ல" என்று கூறும் மூத்த பத்திரிகையாளர் ஷியாம், அதற்கு சான்றாக சில வரலாற்று நிகழ்வுகளை சுட்டிக்காட்டுகிறார்.

"ஜெயலலிதா ஆட்சிக் காலத்தில், 1994-ம் ஆண்டு தொடக்கத்தில் தமிழ்நாடு சட்டப்பேரவையில் உரை நிகழ்த்த அப்போதைய ஆளுநர் சென்னாரெட்டி அழைக்கப்படவே இல்லை. அடுத்த ஆண்டில், அதாவது 1995-ம் ஆண்டில் தனது உரையில் சில பகுதிகளை ஆளுநர் சென்னாரெட்டி தவிர்க்க, சபாநாயகர் காளிமுத்துவோ, ஆளுநர் சில இடங்களை விட்டுவிட்டாலும் அவர் முழுமையாக வாசித்து விட்டதாகவே பொருள் என்று கூறிவிட்டார்" என்பதை ஷியாம் நினைவூட்டினார்.

"அரசு தயாரித்து அளித்த உரைக்கு ஆளுநர் ஒப்புதல் கொடுத்ததும், அதன் பிரதி அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் முன்கூட்டியே தரப்பட்டு விடும். அதன் பிறகு அதில் எந்த மாற்றத்தையும் யாராலும் தன்னிச்சையாக செய்ய முடியாது. மாற்றம் தேவையென்றால், சட்டமன்றத்தில் தீர்மானம்



கொண்டு வந்து நிறைவேற்றியே செய்ய முடியும்." என்று குறிப்பிட்ட அவர், ஆளுநரின் உரை மீது எதிர்க்கட்சிகள் கொண்டு வரும் திருத்தத் தீர்மானம், கண்டனத் தீர்மானம் போன்றவற்றை சுட்டிக்காட்டினார்.

"ஆளுநர் உரை என்பது வெறும் உரையுடன் முடிந்து விடுவது அல்ல. ஆளுநர் உரை மீதான நன்றி தெரிவிக்கும் தீர்மானம் நிறைவேறவில்லை என்றால் ஆளும் அரசு பெரும்பான்மையை இழந்துவிட்டதாகவே பொருள்படும். அரசுக்கு தர்மசங்கடம் தரும் வகையில் ஆளுநரின் உரை இருக்கும் பட்சத்தில், ஆளும் தரப்பினரின் அதிருப்தி எழுவது இயல்பு என்பதால் தீர்மானம் நிறைவேறுவதில் சிக்கல் ஏற்படும். ஆகவே, ஆளுநருக்கு எதிராக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கொண்டு வந்தது அவசியமே தவிர, மரபு மீறலாக கொள்ள முடியாது" என்பது மூத்த பத்திரிகையாளர் தராசு ஷியாமின் கருத்து.

(பிபிசி)

# காலம் கடந்துவிடுவதற்கு முன்னதாக முதிர்ச்சியுடைய அரசியல் தலைவராக ஜனாதிபதி செயல்படவேண்டும்



கலாநிதி ஜெகான் பெரேரா

நீர்ச்சறுக்கல் விளையாட்டில் ஈடுபடுபவர்கள் கடல் அலைகளைக் கையாளும் ஆற்றல் கொண்டவர்களாக இருக்கவேண்டும். அலை எந்தளவுக்கு பெரியதாக இருக்கிறதோ அந்தளவுக்கு அவர்கள் உயரத்துக்கு செல்வார்கள். அலையில் இருந்து தப்பிக்க முயற்சிப்பவர்கள் அதன் கீழே மூழ்கிவிடுவார்கள். எதிரணி அரசியல் கட்சிகளினால் உருவாக்கப்படுகின்ற உள்ளூராட்சி தேர்தல்களுக்கான கோரிக்கை அலையை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கையாளுவார் என்றே தோன்றியது. சட்டப்படி இந்த தேர்தல்கள் எதிர்வரும் மார்ச் மாதமளவில் நடத்தப்படவேண்டியவையாக இருக்கின்றன.

இந்த தேர்தல்கள் ஆளும் கட்சி மீது வாக்காளர்கள் வைத்திருக்கும் குறைந்த மதிப்பை வெளிக்காட்டக்கூடிய சாத்தியம் இருக்கிறது. அவ்வாறு நடந்தால் ஜனாதிபதியின் கரங்கள் வலுப்படும். நாட்டைக் மீளக்கட்டியெழுப்புவதற்கு தேவையான நடவடிக்கைகளை ஆதரிப்பதற்கு அவர்களை அவர் நிர்ப்பந்திக்கமுடியும். உள்ளூராட்சி தேர்தல்களில் தனது கட்சிக்கு ஆதரவாகக் கூட பிரசாரத்தில் ஈடுபடாமல் ஒதுங்கியிருக்கப்போவதாக ஜனாதிபதி முன்கூட்டியே அறிவித்துவிட்டார். தேசிய பொருளாதாரத்தை மீட்டெடுப்பதற்கே தனக்கு ஆணை வழங்கப்பட்டிருக்கிறது என்று அதற்கு அவர் காரணம் கூறுகிறார்.

பொருளாதார மீட்சி மீது கவனத்தைக் குவிப்பதில் ஜனாதிபதி காட்டும் அக்கறைக்கு அந்த பணியின் அவசரமும் அவசியமுமே காரணம். பொருளாதாரம் தொடர்ந்தும் வீழ்ச்சியடைந்துகொண்டே போகிறது. கடந்த வருடம் 8 சதவீதத்தினால் சுருங்கிய பொருளாதாரம் புதிய வருடத்தில் சாதகமான வளர்ச்சிக்கு திரும்புவதற்கு வாய்ப்புக்கள் குறைவு. ஏற்றுமதி பொருளாதாரத்தின் செயற்பாட்டிலான மேம்பாடு மற்றும் வெளிநாடுகளில் வேலைசெய்யும் இலங்கையர்கள் அனுப்புகின்ற பணம் காரணமாக வெளிநாட்டு நாணய வருகையில் படிப்படியான அதிகரிப்புகள் மாத்திரமே இதுவரையில் ஏற்பட்டிருக்கிறது.

ஆனால், பெரியளவிலான வெளிநாட்டு நாணய வருகைக்கு உட்கட்டமைப்புகளில் முதலீடும் நீண்ட கால அடிப்படையிலான உற்பத்தி ஆற்றலும் அவசியம். அது இனிமேல்தான் நடைபெறவேண்டியிருக்கிறது. வல்லமைபொருந்திய ஹெட்ஜ் நிதியாளர்களும் ஏனைய முதலீட்டாளர்களும் கடன் நிவாரணப் பேச்சுவார்த்தைகளில் கடுமையான நிலைப்பாட்டை எடுத்திருக்கும் காரணத்தால் சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து கடனுதவியைப் பெறுவதற்கான செயன்முறைகள் தடைப்பட்டுப்போயிருப்பதாக கூறப்படுகின்றது.

உள்ளூராட்சி தேர்தல்கள் நடத்தப்படும் பட்சத்தில் பிரசார நடவடிக்கைகளில் இருந்து ஒதுங்கியிருப்பதற்கு ஜனாதிபதி எடுத்த முடிவு வெற்றிபெறுவதில் தனது அரசியல் கட்சிக்கு இருக்கக்கூடிய குறைவான வாய்ப்புக்கள் பற்றிய அவரின் மதிப்பீட்டை பிரதிபலிப்பதாகவும் இருக்கக்கூடும். இறுதியாக நடைபெற்ற பொதுத்தேர்தலில் ஐக்கிய தேசிய கட்சி ஒரு ஆசனத்தைக் கூட வென்றெடுக்கவில்லை. உள்ளூராட்சி தேர்தல்களில் அந்த கட்சி சிறப்பாக செயற்பாட்டை வெளிக்காட்டுவதற்கான சாத்தியம் இல்லை. மக்கள் போராட்ட குழப்ப காலப்பகுதிக்கு பிறகு உறுதிப்பாட்டை ஏற்படுத்தியதற்காக சனத்தொகையில் வசதி படைத்த பிரிவினரே ஜனாதிபதியின் தலைமைத்துவத்தை பாராட்டுகிறார்கள்.

ஆனால், மீள்விக்கப்பட்ட இந்த உறுதிப்பாடு ஐக்கிய தேசிய கட்சிக்கான வாக்குகளாக மாறுவதற்கான சாத்தியத்துக்கு மக்கள் அனுபவிக்கின்ற பொருளாதார இடர்பாடுகள் இடமளிக்கப்போவதில்லை.

**முன்னேற்றம் இல்லை**

பழைய வருடத்தின் முடிவில் உறுதியளிக்கப்பட்ட சாதகமான நகர்வை புதுவருடம் இன்னும் கொண்டுவரவில்லை. இலங்கை அதன் 75 வது சுதந்திரதினத்தை கொண்டாடும்போது இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வைக் காண்பது என்ற ஜனாதிபதி விக்கிரமசிங்கவின் உறுதிமொழி நடைமுறை மெய்ம்மையாவதற்கான அறிகுறிகளைக் காணவில்லை. வடக்கு, கிழக்கில் தமிழ் மக்கள் எதிர்நோக்குகின்ற நடைமுறைப் பிரச்சினைகளுக்கான தீர்வுகளைப் பொறுத்தவரையிலும் கூட முன்னேற்றம் இல்லை என்பது குறித்து பிரதான தமிழ் அரசியல் அணியான தமிழ் தேசிய கூட்டமைப்பு அதிருப்தி வெளியிட்டிருக்கிறது.

நிலப்பிரச்சினை ஓய்வின்றி தொடருகிறது. தமிழர்களும் முஸ்லிம்களும் விவசாயம் செய்துகொண்டிருந்த அரச நிலங்கள் சுவீகரிக்கப்பட்டு கம்பனிகளுக்கு அல்லது சிங்கள மக்களுக்கு வழங்கப்படுகிறது. அந்த பகுதிகளில் கண்டெடுக்கப்படும் பௌத்த தொல்லியல் பொருட்கள் முரண்பாடுகள் மூளும் இடங்களாக மாறுகின்றன. தமிழர்களும் முஸ்லிம்களும் வாழ்ந்த பகுதிகளுக்குள் சிங்களவர்கள் பிரவேசிக்கும்போது பிரச்சினைகள் ஏற்படுகின்றன.

போர்க் காயங்களும் புரையோட விடப்படுகின்றன. பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் நீண்டகாலமாக தடுத்துவைக்கப்பட்டிருக்கும் கைதிகள் மற்றும் காணாமல்போனோரின் கதி பற்றிய பிரச்சினைகள் தீர்க்கப்படாமல் தொடருகின்றன. இந்த பிரச்சினைகள் தமிழர்களைப் பொறுத்தவரை அடையாள முக்கியத்துவமுடையவை. அவற்றை கையாளுவதாக உறுதியளித்துவிட்டு பிறகு அரசாங்கம் கைவிடுவது அதன் மீதான நம்பிக்கையை மேலும் அரித்துவிடும்.



அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்துகின்ற தமிழ் தேசிய கூட்டமைப்பு ஜனாதிபதியின் உறுதிமொழிகளை ஒருவகை நம்பிக்கையுடன் நோக்கியது. அரசாங்கம் அந்த உறுதிமொழிகளை நிறைவேற்றத் தவறும்போது கூட்டமைப்பும் தமிழ் மக்கள் மத்தியில் நம்பிக்கையை இழக்கும் நிலை ஏற்படும். இது அவர்கள் எதிர்நோக்குகின்ற ஒரு முக்கிய பிரச்சினையாகும். தங்களது மக்களின் நம்பிக்கையை பேணவேண்டிய அவசியம் கூட்டமைப்புக்கு இருக்கிறது. அதனால்தான் அவர்கள் பேச்சுவார்த்தைகளில் இருந்து விலகுவது குறித்து சிந்திக்கவேண்டிவரும் என்று எச்சரிக்கை செய்தார்கள்.

உள்ளூராட்சி தேர்தல்களை ஒத்திவைப்பதற்கான அரசாங்கத்தின் முயற்சி புதுவருடத் தொடக்கத்தின் இன்னொரு கெடுதியான அறிகுறியாகும். அவுஸ்திரேலியா போன்ற சில நாடுகளில் மூன்று வருடங்களுக்கு ஒரு தடவை பொதுத்தேர்தல்கள் நடத்தப்படுகின்றன. அமெரிக்கா போன்ற வேறு நாடுகளில் காங்கிரஸின் அரைவாசி ஆசனங்களுக்கு இரு வருடங்களுக்கு ஒரு தடவை பொதுத் தேர்தல்கள் நடத்தப்படுகின்றன. தீர்மானங்களை மேற்கொள்வதற்கான பொறுப்பு ஒப்படைக்கப்பட்டவர்களுடன் தாங்கள் இணங்கிக்கொள்கிறார்களா இல்லையா என்பதை வெளிக்காட்டவும் அதிருப்தி ஏற்பட்டால் புதிய பிரதிநிதிகளை தெரிவு செய்வதற்கும் வாய்ப்பைக் கொடுப்பதற்காக இந்த நடைமுறை பின்பற்றப்படுகிறது.

பொருளாதாரத் துன்பங்கள் காரணமாக மக்கள் பெரும் வேதனையும் விரக்தியும் அடைந்திருப்பதால் அவர்கள் தங்கள் உணர்வுகளை வெளிப்படுத்துவதற்கான வாய்ப்பாக தேர்தல்கள் நடத்தப்படவேண்டியதன் முக்கியத்துவத்தை குறைத்து மதிப்பிடமுடியாது. உள்ளூராட்சி தேர்தல்கள் ஒத்திவைக்கப்பட்டால் மக்கள் தங்களின் விரக்தியை வேறு மார்க்கங்களில் வெளிக்காட்டக் கூடும். அது நிச்சயமாக அமைதிவழி மார்க்கமாகத்தான் இருக்கும் என்று சொல்லமுடியாது.

**சவாலை ஏற்றுக்கொள்ளல்**

ஜனாதிபதியின் முரண்பாடான அறிவிப்புகள் மற்றும் செயற்பாடுகள் மூலமாக தேர்தல்கள் தொடர்பில் அரசியல் சமுதாயத்திற்குள் நிலவுகின்ற முரண்பாடுகளையும் அவர் மீது பிரயோகிக்கப்படும் நெரக்குதல்களையும் புரிந்துகொள்ளக்கூடியதாக இருக்கிறது. முன்னர் ஐந்து தடவைகள் பிரதமராக இருந்தபோது அவரின் தலைமைத்துவம் மென்மையான அணுகுமுறை கொண்டதாக இருந்தது. ஆனால், அதிகாரத்தில் இல்லாதபோது அவர் ஆதரித்த மக்கள் போராட்ட இயக்கத்தை ஜனாதிபதியாக பதவியேற்றதன் பின்னர் கொடுங்கரம் கொண்டு அடக்கியொடுக்கினார். போராட்ட இயக்கத்துக்கு தலைமத்துவத்தை வழங்கியவர்களை அரசாங்கம் தொடர்ந்து கைதுசெய்கின்ற விதம் எதிர்காலத்தில் அதே போன்ற போராட்டங்களை நடத்துவதற்கு திட்டமிடக்கூடியவர்களுக்கு ஒரு பயமுறுத்தல் செய்தியைச் சொல்கிறது.

போராட்டக்காரர்களை தண்டித்து முடங்கச் செய்வதற்கு சட்டம் பயன்படுத்தப்படுகிறது. ஆனால், வன்முறையில் ஈடுபட்ட கும்பல்களையும் பாரிய ஊழல் மோசடிகளில் ஈடுபடுவதாக குற்றஞ்சாட்டப்படுபவர்களையும் அரசாங்கம் வேறு விதமாக கையாளுகிறது. கொள்வனவு செயற்பாடுகளில் உயர்மட்டத்தில் கடுமையான ஊழல் தொடருவதற்கு அனுமதிக்கப்படுகிறது. இது மன்னிக்கமுடியாததாகும்.

மக்கள் மத்தியில் அவருக்கு இருந்த செல்வாக்கினாலோ அல்லது அவர்கள் வாக்களித்ததனாலோ விக்கிரமசிங்க ஜனாதிபதியாக வரவில்லை. பொருளாதாரம் வீழ்ச்சியடைந்தபோது அரசாங்கம் முன்வைத்த சவாலை ஏற்றுக்கொள்ள முன்வந்த காரணத்தினாலேயே அவர் ஜனாதிபதியானார். மக்களால் தெரிவுசெய்யப்பட்ட ஜனாதிபதி போராட்ட இயக்கத்துக்கு முகங்கொடுக்கமுடியாமல் பதவியை ராஜினாமா செய்ததையடுத்து ஆளும் கட்சி விக்கிரமசிங்கவை அதன் சிறந்த தெரிவாக்கியது.

ஊழல் மோசடிகளினாலும் தவறான ஆட்சிமுறையினாலும் நாட்டின் பொருளாதாரத்தை நிலைகுலையச் செய்த ஆளும் கட்சியின் தோழமையுடன் அதிகாரத்தில் இருப்பதை விடவும் ஜனாதிபதிக்கு சவால் மிக்க முக்கியமான பணி இருக்கிறது. அந்த பணியை நிறைவேற்றுவதற்கு அவர் கட்சி அரசியலுக்கும் தனது சொந்த நலன்களுக்கும் அப்பால் நின்று நாட்டின் பிரச்சினைகளை தீர்த்துவைப்பதற்கு தனது ஜனாதிபதி பதவியின் அதிகாரங்களை பயன்படுத்தவேண்டும்.

நாட்டின் 75 வது சுதந்திர தினமளவில் இனப்பிரச்சினைக்கு தீர்வைக் காணப்போவதாக ஜனாதிபதி உறுதி பூண்டபோது தற்போதைய அரசியல் மற்றும் பொருளாதார நிலைவரம் குறித்து ஒரு மதிப்பீட்டை அவர் செய்திருந்தார் எனபதை விளங்கிக்கொள்ளக்கூடியதாக இருந்தது. நாட்டினதும் மக்களினதும் நல்வாழ்வுக்காக ஒரு தொலை நோக்கை அவர் வெளிப்படுத்தினார். அதற்காக அவரைப் பாராட்டவேண்டும். இப்போது அவர் மதிப்பீடுகளுக்கு அப்பால் சென்று தேசிய நலனை மனதிற்கொண்டு செயலில் இறங்கவேண்டும்.

பொருளாதாரத்தை மீட்டெடுப்பதே தனக்குரிய ஆணை என்ற அடிப்படையில் தனது கட்சிக்காக உள்ளூராட்சி தேர்தல்களில் பிரசாரங்களில் ஈடுபடப்போவதில்லை என்ற ஜனாதிபதியின் அறிவிப்பு அறிவுஜீவிகள் சமூகமும் சர்வதேச சமூகமும் அவரிடம் காண்கின்ற உயர்ந்த சிந்தனையின் இன்னொரு அறிகுறியாகும். இருள்சூழ்ந்த இன்றைய காலகட்டத்தில் நாட்டுக்கு தேவைப்படுவது அடுத்த தேர்தலில் வெற்றி பெறுவதற்காக அதுவரை காலத்தைக் கடத்துவது பற்றி சிந்திக்கின்ற ஒரு தலைமைத்துவம் அல்ல, தன்னிடம் இன்று இருக்கின்ற அதிகாரத்தை நேற்றைய, இன்றைய, நாளைய பிரச்சினைகளை தீர்ப்பதற்கு பயன்படுத்தக் கூடிய தலைமைத்துவமேயாகும்.

# சட்டக்கல்லூரி நுழைவுப் பரீட்சை கட்டணம் 15000 ரூபாவாக உயர்வு

கொழும்பு, ஜன. 11

சட்டக்கல்லூரி நுழைவு பரீட்சைக் கான கட்டணத்தை அதிகரித்துள்ளதாக சட்டக் கல்விச் சபை அறிவித்துள்ளது.

நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ வின் இணக்கத்துடன் அதற்கான வர்த்த மானி அறிவித்தலும் வெளியிடப்பட்டுள் ளது.

6,000 ரூபாவாக இருந்த பொது நுழைவுப் பரீட்சைக்கான கட்டணம் 9,000 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டுள் ளது. இதற்கமைய, நுழைவுப் பரீட்சை கட்டணம் 15,000 ரூபாவாக அதிகரிக்கப் பட்டுள்ளது. வெளிநாட்டு சட்டமாணிப் பட்டம் பெற்ற மாணவர்களுக்கு சட்டக் கல்லூரியில் இணைவதற்கான கட்ட ணம் 75 ஆயிரம் ரூபாயாகும். இது தவிர நடை முறை பயிற்சி வகுப்பு கட்டணம், விரிவு ரைகள், நூலகங்கள் என பல கட் டணங்களும் அதிகரிக்கப்பட்டுள்ளன.

## மன்னார் ஒருங்கிணைப்புக் குழு அலுவலகத்தை இன்னமும் ஒப்படைக்காத காதர் மஸ்தான் எம்.பி!

மன்னார், ஜன. 11

மன்னார் மாவட்ட முன் னாள் ஒருங்கிணைப்புக்குழுத் தலைவரும் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான இராஜாங்க அமைச்சர் கா. காதர் மஸ்தான், மாவட்ட செய லகத்தில் ஒதுக்கப்பட்ட ஒருங்கி ணைப்புக்குழு அலுவலகத்தைத் தொடர்ந்தும் பயன்படுத்தி வரு கின்றார் என்று தெரிவிக்கப்படு கின்றது.

உள்ளூராட்சி சபைத் தேர் தல் வேட்புமனுத் தாக்கல் திகதி அறிவிக்கப்பட்டுள்ள நிலை யில், மாவட்ட செயலகத்தில் உள்ள அலுவலகத்தை பாராளு மன்ற உறுப்பினர் மஸ்தானின் ஒருங்கிணைப்பாளர் தொடர்ந் தும் கையகப்படுத்தி வைத்துள் ளார் என்று கூறப்படுகின்றது.

ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க பதவியேற்ற பின்னர், மன்னார் மாவட் டத்துக்கு ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் நியமிக்கப்பட வில்லை.

ஆனாலும், முன்னர் தான் பயன்படுத்திய ஒருங்கிணைப் புக்குழு அலுவலகத்தை பாராளுமன்ற உறுப்பினர் தொடர்ந்தும் பயன்படுத்தி வருகின்றார்.

ஒருங்கிணைப்புக்குழு அலுவலகத்துக்கு நியமிக்கப் பட்ட அரச பணியாளர்களும் அங்கு தொடர்ந்து பணியாற்றி வருகின்றனர் என்பதும் குறிப் பிடத்தக்கது. (அ)

## ஓய்வு பெற்ற ரயில்வே ஊழியர்களுக்கு ஒப்பந்த அடிப்படையில் மீள நியமனம்

கொழும்பு, ஜன. 11

ரயில் திணைக்களத்தில் ஏற் பட்டுள்ள வெற்றிடங்களுக்கு ஓய்வு பெற்ற ரயில்வே ஊழியர் களை ஒப்பந்த அடிப்படையில் மீள இணைத்துக் கொள்வது தொடர்பில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

ரயில் திணைக்கள பொது முகாமையாளர் டபிள்யூ.ஏ.டி. எஸ். குணசிங்க இதனைத் தெரி வித்தார்.

தேவையின் அடிப்படையில் அவர்களை ஒப்பந்த அடிப் படையில் மீண்டும் பணியில் சேர்ப்பதற்கு பொதுச்சேவை ஆணைக்குழுவின் அனுமதி கிடைக்குமென தாம் நம்புவதா கவும் அவர் குறிப்பிட்டார்.

கடந்த மாதம் 31ஆம் திகதி ரயில் திணைக்களத்தைச் சேர்ந்த சுமார் 450 பேர் ஓய்வு பெற்றதையடுத்தே அத்தியாவ சிய சேவைகளுக்காக ஒப்பந்த அடிப்படையில் சுமார் 400 ஊழியர்களை மீளப் பணிக்க மர்த்த ரயில் திணைக்களம் தீர்மானித்துள்ளது. (அ)

# பெற்றோலிய கூட்டுத்தாபன ஊழியர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள பெருந்தொகைப் பணம்!

கொழும்பு, ஜன. 11

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் ஊழி யர்களுக்கு 2021ஆம் ஆண்டு சம்பளம் மற்றும் கொடுப் பனவுகளாக வழங்கப்பட்ட சுமார் 603 கோடி ரூபாவில் பெரும் பகுதி மேலதிக நேர கொடுப்பனவுகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ளதாக கணக்காய்வு அறிக்கை வெளிப் படுத்தியுள்ளது.

2020 ஆம் ஆண்டில் சம்பளம் மற்றும் கொடுப்பனவு களுக்காக 494 கோடிகள் செலவிடப்பட்டுள்ளதாகவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மாநகராட்சியில் பணி புரியும் 2,296 ஊழியர்களில் 998 பேர் தங்களது அடிப்படைச் சம்பளத்தில் ஐம்பது சதவீதத்துக்கு மேல் கூடுதல் நேரத்தைப் பெறுகிறார்கள் என்றும், அதாவது மொத்த ஊழியர்களின் எண்ணிக்கை யில் 17 சதவீதம் பேர், தங்கள் அடிப்படைச் சம்பளத்தில் நூறு சதவீதத்துக்கு மேல் கூடுதல் நேரக் கொடுப்பன வைப் பெறுகிறார்கள் என்றும் அறிக்கை கூறுகின் றது.

மேலும்,16 பணியாளர்கள் தங்களது அடிப்படைச் சம்பளத்தில் 200 சதவீத மேலதிக நேர கொடுப்பனவைப் பெறுவதாகவும் அறிக்கை கூறுகின்றது.

பல ஊழியர்களின் சம்பளத்தில் கணிசமான தொகையை கடனுக்காக குறைக்க வேண்டியுள்ள தாகவும், எனவே உண்மையான கூடுதல் நேர சேவை தேவையில்லாத போதும் கூடுதல் நேர வேலை செய்ய அமைப்பு அனு மதித்துள்ளதாகவும், இதனால் கூடுதல் நேரத்தைச் செலுத்த வேண்டியுள்ளதாகவும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் வரு டாந்த செயற்திறன் அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள 2021 ஆம் ஆண்டுக்கான வருடாந்த கணக்காய்வு அறிக்கையில் இது குறிப்பிடப்பட்டுள்ளது.

(அ)

கல்வி tv CHANNEL-1

**11.01.2023**
**புதன்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | விஞ்ஞானம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | புவியியல் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | புவியியல் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | தமிழ் இலக்கியம் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast கணிதம் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மாதிரி வினாத்தாள் |
| | மறு ஒளிபரப்பு | மறுஒளிபரப்பு-LIVE கணிதம் |
| | | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| | | மாதிரி வினாத்தாள் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 04.30 | தரம்-10 | புவியியல் |

கல்வி tv CHANNEL - 2

**11.01.2023**
**புதன்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | தமிழ் |
| 09.00 | தரம்-02 | சமயம் |
| 09.45 | தரம்-03 | தமிழ் |
| 10.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 11.15 | தரம்-04 | தமிழ் |
| 12.30 | தரம்-04 | Computer |
| 01.15 | தரம்-05 | தமிழ் |
| 02.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoon |
| 05.15 | தரம்-02 | சமயம் |
| 06.00 | தரம்-03 | தமிழ் |
| 06.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 07.30 | தரம்-04 | தமிழ் |
| 08.15 | தரம்-04 | Computer |
| 09.00 | தரம்-05 | தமிழ் |
| 09.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி-paper |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | தமிழ் |
| 12.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 01.15 | தரம்-04 | தமிழ் |
| 02.00 | தரம்-04 | Computer |
| 02.45 | தரம்-05 | தமிழ் |
| 03.30 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# பிள்ளையானின் கட்சி யாழிலும் போட்டிடும்!

## பொதுச் செயலாளர் பிரசாந்தன் அறிவிப்பு

மட்டக்களப்பு, ஜன. 11

உள்ளூராட்சித் தேர்தலில் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி திருகோணமலை, மட்டக்களப்பு ,அம்பாறை மாவட்டங்களிலும், யாழ்ப்பாணத்தில் சில உள்ளூராட்சி மன்றங்களிலும், பொலனறுவை மாவட்டத்தில் தமிழர்கள் செறிந்து வாழ்கின்ற பிரதேசங்களிலும் தனித்துவமாக படகுச் சின்னத்தில் போட்டியிடவுள்ளதாக தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சியின் பொதுச் செயலாளர் பூபாலபிள்ளை பிரசாந்தன் தெரிவித்தார்.



நடைபெறவிருக்கின்ற உள்ளூராட்சி மன்ற தேர்தலில் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி போட்டியிடுவது தொடர்பாக ஊடகங்களுக்கு தெளிவுபடுத்தும் ஊடக சந்திப்பு நேற்று முன்தினம் கட்சியின் தலைமை அலுவலகத்தில் நடைபெற்றது.

இதன்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவர் சிவநேசத்துரை சந்திரகாந்தன்(பிள்ளையான்) தலைமையில் கட்சியின் தலைமை காரியாலத்தில் நடைபெற்ற கட்சியின் உயர் மட்டக் குழு உறுப்பினர்களுக்கிடையிலான கலந்துரையாடலை தொடர்ந்து எடுக்கக் ப்பட்ட முடிவுக்கு அமைய குறித்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார். (அ)

# தேர்தல் நடவடிக்கைக்காக குழு நியமித்தது தமிழ் அரசுக் கட்சி

மட்டக்களப்பு, ஜன. 11

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்தியகுழு கூட்ட தீர்மானத்துக்கு அமைய மட்டக்களப்பு மாவட்ட தேர்தல் நடவடிக்கைக்காக குழு நியமனம் நியமிக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் இது குறித்த தகவலை வெளியிட்டார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்-

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த வருடம் வட்டாரக் கிளைகள் புனரமைப்பு செய்யப்பட்டிருந்தபோதிலும் பிரதேசக் கிளைகள், தொகுதிக் கிளைகள் புனரமைப்பு செய்யப்படவில்லை. அதனால் மாவட்டக் கிளையும் அமைக்கப்படவில்லை.

இந்த நிலையில், உள்ளூராட்சிச் சபைத் தேர்தலுக்கு வேட்பாளர்களை தெரிவு செய்யும் வகையில் வட்டாரக் கிளைகள் விரைவாக கூடி வேட்பாளரை தெரிவு செய்வதுடன் வேட்பாளர் தெரிவின்போது பட்டியல் வேட்பாளர் தெரிவு சம்பந்தமாகவும் கவனம் செலுத்தவேண்டும். அத்தோடு வேட்பாளர் தெரிவின்போது இளைஞர், மகளிர் உள்வாங்கும் வகையில் தெரிவுகளை மேற்கொள்ள வேண்டும். வேட்பாளர் விண்ணப்பப் படிவத்தை வட்டாரக்கிளைத் தலைவர், செயலாளர், பொருளாளர் சிபாரிசு செய்து தேர்தல் நடவடிக்கை குழுவுக்கு கையளிக்க தயாராக வேண்டும். மாவட்ட தேர்தல் நடவடிக்கைக் குழு கூடி கலந்துரையாடிய பின்னர் மேலதிக விவரங்கள் அறியத்தரப்படும்.

மாவட்ட தேர்தல் நடவடிக்கைக் குழுவில் கி.துரைராசசிங்கம், பா.அரியநேந்திரன், சீ. யோகேஷ்வரன், ஞா.ஸ்ரீநேசன், இரா.சாணக்கியன்,மா.நடராஜா, தி.சரவணபவன், கி.சேயோன், க. றஞ்சினி, க.குருநாதன், லோ. தீபாகரன், க.சசீந்திரன், ம.நிலக்சன் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர் - எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)



# ஐக்கிய காங்கிரஸ் கட்சி கட்டுப்பணம் செலுத்தியது

அம்பாறை, ஜன. 11

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்காக மௌலவி முபாறக் அப்துல் மஜீத் தலைமையிலான ஐக்கிய காங்கிரஸ் கட்சி அம்பாறை மாவட்ட செயலகத்தில் கட்டுப்பணம் செலுத்தியுள்ளது.

நேற்றுமுன்தினம் கல்முனை மாநகர சபை தேர்தலுக்காக ஐக்கிய காங்கிரஸ் கட்சி சார்பில் மௌலவி முபாறக் அப்துல் மஜீத் தலைமையிலான செயலாளர் முஜாஹித், தவிசாளர் முஹம்மத் ரஷாத் ஆகியோர் கட்டுப்பணம் செலுத்தினர்.

இதேவேளை, உள்ளூராட்சி தேர்தலில் போட்டியிட ஆர்வமுள்ள இளைஞர்கள் மற்றும் பொதுமக்களிடமிருந்து விண்ணப்பங்கள் மௌலவி முபாறக் அப்துல் மஜீத் தலைமையிலான ஐக்கிய காங்கிரஸ் கட்சி கோரியுள்ளது.

திருகோணமலை மாவட்ட கிண்ணியா நகரசபை, கிண்ணியா பிரதேச சபை, புல்மோட்டை பிரதேச சபை, மூதூர் பிரதேச சபை, மட்டக்களப்பு மாவட்ட கோறளைப்பற்று மேற்கு (ஓட்டமாவடி) பிரதேச சபை, ஏறாவூர் நகரசபை, காத்தான்குடி நகரசபை, அம்பாறை மாவட்ட கல்முனை மாநகர சபை, காரைதீவு பிரதேச சபை, நிந்தவூர் பிரதேச சபை, அட்டாளைசேனை பிரதேச சபை, அக்கரைப்பற்று மாநகர சபை, அக்கரைப்பற்று பிரதேச சபை, இறக்காமம் பிரதேச சபை, சம்மாந்துறை பிரதேச சபை ஆகிய உள்ளூராட்சி மன்றங்களில் ஐக்கிய காங்கிரஸ் கட்சியுடன் இணைந்து களமிறங்க விருப்பமுடைய இளைஞர்கள் மற்றும் பொதுமக்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. (அ)

# கல்முனை விக்டோறியஸ் வி.க. 40ஆம் ஆண்டு நிறைவு நாளை

அம்பாறை, ஜன. 11

கல்முனை உவெஸ்லி உயர தரப் பாடசாலையை தளமாக கொண்டு 1982 இல் ஆரம்பிக்கப்பட்ட கல்முனை விக்டோறியஸ் விளையாட்டுக் கழகம் இந்த ஆண்டில் 40ஆவது ஆண்டு நிறைவு கொண்டாட்ட தொடர் நிகழ்வுகளை நாளை வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு கல்முனை நகர் ஐக்கிய சதுக்கத்தில் ஆரம்பித்து வைக்கிறது.

2023 ஆம் ஆண்டு முழுவதும் கட்டம் கட்டமாக நடைபெற உத்தேசிக்கப்பட்டுள்ள இவ் நிகழ்வுகளை சம்பிராதய பூர்வமாக ஆரம்பித்து வைக்கும் நிகழ்வில் விக்டோறியஸ் விளையாட்டுக் கழகத்தின் 40ஆவது ஆண்டு நிறைவு கொண்டாட்ட இலச்சினை பதிக்கப்பட்ட ரிசேட்டுகள் காட்சிப்படுத்தப்பட்டு வெளியீட்டு வைக்கப்படவுள்ளன.

இந்த நிகழ்வை தொடர்ந்து “நோய் அற்ற வாழ்வே குறையற்ற செல்வம்“ எனும் தொனிப் பொருளை உயிர்ப்பிக்கும் வகையில் சைக்கிள் ஓட்ட நிகழ்வும் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக கல்முனை மாநகர முதல்வர் சட்டத்தரணி ஏ. எம். றகீப், கௌரவ அதிதியாக கல்முனை டாக்டர் ஜெமீல் ஞாபகர்த்த வைத்தியசாலை குழுமத்தின் தவிசாளர் மருத்துவர் ஜெமீல் முகம்மட் றிஸான், விசேட அதிதிகளாக கல்முனை மாநகர ஆணையாளர் ஏ.எல். எம். அஸ்மி, கல்முனை பிரதேச செயலாளர் ஜே. லியாகத்அலி, சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம் ஆசிக் , கல்முனை வடக்கு மேலதிக பிரதேச செயலாளர் ரீ.ஜே. அதிசயராஜ் , கல்முனை தலைமையக பொலிஸ் பரிசோதகர் எம். ரம்ஷீன் பக்கீர் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர். (அ)

# மட்டக்களப்பில் நிர்க்கதியாகியுள்ள குடும்பத்துக்கு உதவிய தொழிலதிபர்



மட்டக்களப்பு, ஜன. 11

மட்டக்களப்பு ஆரையம்பதியில் ஏற்பட்ட தீ விபத்தினால் நிற்கதியாகிய 3 பேர் கொண்ட குடும்பத்துக்கு மட்டக்களப்பு வர்த்தக சங்கத்தின் தலைவரும் தொழிலதிபருமாகிய தேசபந்து எம்.செல்வராசா தாமாகவே முன்வந்து பல்வேறுபட்ட உதவிகளை வழங்கியுள்ளார்.

கடந்த 5 நாட்களுக்கு மேலாக நிர்க்கதியாகியிருந்த குடும்பத்தை நேரில் சென்று பார்வையிட்ட தொழிலதிபர் செல்வராசா, அவர்களுக்கு தேவையாக காணப்பட்ட பல்வேறுபட்ட தேவைகளை நிவர்த்தி செய்து கொடுத்ததுடன், 50,000 ரூபாவை பணமாகவும் கொடுத்து உதவியுள்ளார்.

காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குற்பட்ட ஆரையம்பதி செல்வாநகர் கிழக்கு நாவலர் வீதியில் அமைந்துள்ள குறித்த வீடு கடந்த 31 திகதி இரவு 8.30 மணிக்கு திடீரென ஏற்பட்ட தீப்பரவலினால் எரிந்து சாம்பலாகியுள்ளது.

மூன்று பேர் கொண்ட குடும்பத்தின் உடு புடைவை, தரம் 8 இல் கல்வி பயிலும் மகனின் கற்றல் உபகரணங்கள், ஜீவனோபாயத்திற்காக மேற்கொண்டு வந்த சுயதொழிலுக்கான உபகரணங்கள் உள்ளிட்ட அவர்களது சொத்துக்கள் அனைத்தும் தீயினால் எரிந்து சாம்பலாகியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

# கோவில்போரதீவு விவேகானந்தாவுக்கு போட்டோப் பிரதி இயந்திரம் வழங்கல்



மட்டக்களப்பு, ஜன. 11

மட்டக்களப்பு கோவில் போரதீவு விவேகானந்தா மகா வித்தியாலயத்திற்கு போட்டோ பிரதி இயந்திரம் வழங்கப்பட்டது.

பாடசாலை நிர்வாகத்தினால் கோவில் போரதீவை சேர்ந்த தற்போது கனடா மாநகரில் வசித்து வரும் சமூக தொண்டரும் பாடசாலையின் பழைய மாணவருமான தாமோதரம் தக்கன் இந்த போட்டோ பிரதி இயந்திரத்தை வழங்கினார்.

மாணவர்களின் கற்றல், ஆசிரியர்களின் கற்பித்தல் நடவடிக்கைக்கு உதவக்கூடிய வகையில் சுமார் மூன்று லட்சம் ரூபாய் பெறுமதியான போட்டோ பிரதி இயந்திரம் வழங்கப்பட்டது. (அ)

# பிரேசில் அரச கட்டடங்களை கைப்பற்றிய 1500 பேர் கைது!



பிரேசிலியா, ஜன. 11

பிரேசிலில் வன்முறையில் ஈடுபட்டு, அரச கட்டடங்களை கைப்பற்றிய முன்னாள் தீவிர வலதுசாரி ஜனாதிபதி ஜெய்ர் போல்சனாரோவின் ஆதரவாளர்கள் சுமார் 1500 பேர் கைது செய்யப்பட்டனர்.

அத்துடன், அரசாங்கத்தின் மூன்று கிளைகளின் தலைவர்கள் அரசாங்க கட்டடங்களை முற்றுகையிட்டதைக் கண்டித்து ஒரு அரிய கூட்டு அறிக்கையை வெளியிட்டுள்ளனர்.

கடந்த ஞாயிறன்று தலைநகரான பிரேசிலியாவை உலுக்கிய அரசியல் வன்முறைச் செயல்களை நிராகரித்து, ஜனாதிபதி லூயிஸ் இனாசியோ லுலா டா சில்வா, உச்சநீதிமன்றம் மற்றும் காங்கிரஸின் இரு அவைகளின் தலைவர்கள் இணைந்து திங்களன்று அறிக்கை வெளியிட்டனர்.

"அமைதி மற்றும் ஜனநாயகத்தைப் பாதுகாப்பதில்" அமைதியாக இருக்க வேண்டும் என்று தலைவர்கள் அழைப்பு விடுத்தனர், மேலும் சமூக ஊடகங்களில் பகிரப்பட்ட அறிக்கையில், "பயங்கரவாதச் செயல்கள் மற்றும் குற்றவியல், ஆட்சிக்கவிழ்ப்பு நாசவேலைகளை நிராகரிக்கிறோம்" என்று கூறினர்.

முன்னாள் இராணுவ கப்டனின் தேர்தல் தோல்வியை ஏற்க மறுத்த ஆயிரக்கணக்கான போல்சனாரோ ஆதர வாளர்கள் ஞாயிற்றுக்கிழமை காங்கிரஸ், உச்சநீதிமன் றம் மற்றும் ஜனாதிபதி மாளிகையை முற்றுகையிட்டனர், சிலர் போல்சனாரோவை மீண்டும் அதிகாரத்திற்கு கொண்டு வர அல்லது லுலாவை பதவியில் இருந்து அகற்ற இராணுவ தலையீட்டிற்கு அழைப்பு விடுத்தனர்.

பிரேசிலின் வரலாற்றில் மிகவும் பிளவுபட்ட ஜனாதிபதித் தேர்தல்களில் ஒன்றான இந்த தேர்தலில் வெற்றியீட்டி, ஜனவரி முதலாம் திகதி லுலா ஜனாதிபதியாகப் பதவியேற்ற சில நாட்களுக்குப் பிறகு இந்த சம்பவம் நடந்தது.

இடதுசாரி தலைவர் ஒக்ரோபர் 30 இல் நடந்த இரண்டாவது தேர்தலில் போல்சனாரோவை தோற்கடித்தார், மொத்த வாக்குகளில் 50.8 சதவீதத்தைப் பெற்றார்.

முறையாக தோல்வியை ஒப்புக்கொள்ளாத, ஆனால் ஜனாதிபதி மாற்றத்தை அங்கீகரித்த போல்சனாரோ, தேர்தலுக்கு பல மாதங்களுக்கு முன்னதாக பிரேசிலின் மின்னணு வாக்குப்பதிவு முறை மோசடிக்கு ஆளாகக் கூடியது என்று பொய்யாகக் கூறியிருந்தார் - அவர் முடிவுகளை சவால் செய்ய திட்டமிட்டார்.

அவரது ஆதரவாளர்கள் பலர் வாக்கு திருடப்பட்டதாக தொடர்ந்து நம்புகிறார்கள். இதனால் சிலர் போல்சனாரோவின் தோல்விக்குப் பிறகு சில நாட்களில் சாலைத் தடைகளை அமைத்தனர். மற்றவர்கள் பிரேசிலியாவில் உள்ள இராணுவ தலைமையகத்திற்கு வெளியே முகாமிட்டு, இராணுவம் தலையிட வேண்டும் என்று கோரினர்.

திங்களன்று, நூற்றுக்கணக்கான வீரர்கள் மற்றும் பொலிஸார் போல்சனாரோ ஆதரவாளர்களின் இந்த முகாமை அகற்றினர். அங்கு சுமார் 3,000 போல்சனாரோ ஆதரவாளர்கள் கூடாரங்களை அமைத்திருந்தனர். போராட்டத்தில் ஈடுபட்ட 1,500 பேர் கைது செய்யப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதற்கிடையில், அரசாங்கத்தின் மூன்று கிளைகளின் தலைமையகமாக செயல்படும் சின்னமான தலைநகரின் த்ரீ பவர்ஸ் சதுக்கத்தில் மக்கள் கூடுவதை தடை செய்து, ஏராளமாக கலகத்தடுப்பு பொலிஸார் நிறுத்தப்பட்டனர். (அ)



## பாகிஸ்தானில் கோதுமை மாவுக்கு கடும் தட்டுப்பாடு!

### கிலோ ரூ.6500 வரை விற்பனை!!

இஸ்லாமாபாத், ஜன. 11

பாகிஸ்தானில் கோதுமை மாவுக்கு கடும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள நிலையில், கிலோ 6500 ரூபா வரை விற்பனை செய்யப்படுகிறது.

கோதுமை மாவுக்கு ஏற்பட்டுள்ள கடும் தட்டுப்பாடால் பாகிஸ்தான் தற்போது நெருக்கடியை சந்தித்து வருகிறது.

நாட்டின் பல்வேறு பகுதிகளில் பொதுமக்களுக்கு அரசாங்கம் குறைந்த விலையில் கோதுமை மாவு வழங்கி வரும் நிலையில், அதனை வாங்க முயன்ற போது கூட்ட நெரிசலில் சிக்கி 3 பெண்கள் உள்பட 4 பேர் இதுவரை உயிரிழந்திருப்பதாகவும், பலர் காயமடைந்திருப்பதாகவும் அந்நாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

கடந்த ஆண்டு போதுமான அளவு கோதுமையை இருப்பு வைக்காததே தற்போதைய பிரச்னைக்கு காரணமென பாகிஸ்தான் அரசு மீது அந்நாட்டு மக்கள் குற்றம்சாட்டி வருகின்றனர். (அ)

## ஹஜ் பயணிகளுக்கான கட்டுப்பாடுகள் தளர்வு!

ரியாத், ஜன. 11

2023 ஹஜ் பருவத்தின் போது கோவிட்-19 கட்டுப்பாடுகளை நீக்குவதாக சவூதி அரேபியா தெரிவித்துள்ளது.

இதன்மூலம், தொற்றுநோய்க்கு முந்தைய காலப்பகுதியை போலவே யாத்ரீகர்கள் அனுமதிக்கப்படுவார்கள் என சவூதி அரேபியாவின் ஹஜ் மற்றும் உம்ரா அமைச்சு தெரிவித்துள்ளது.

2019 ஆம் ஆண்டில், தொற்றுநோய் தாக்குதலுக்கு முந்தைய ஆண்டு, சுமார் 2.6 மில்லியன் மக்கள் ஹஜ் பயணம் செய்தனர். 2022 ஆம் ஆண்டில் ஒரு மில்லியன் வெளிநாட்டு யாத்ரீகர்களை அனுமதிப்பதற்கு முன், 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் குறைந்த எண்ணிக்கையிலானவர்களை மட்டுமே இராச்சியம் அனுமதித்தது.

ஹஜ் அமைச்சு ஒரு ருவீட்டில், மெக்கா மற்றும் மதீனாவில் உள்ள இஸ்லாத்தின் புனிதத் தலங்களின் தாயகமான இராச்சியம், இந்த பருவத்திற்கு வயது வரம்புகள் உட்பட எந்த கட்டுப்பாடுகளையும் விதிக்காது என்று தெரிவித்துள்ளது.

18 முதல் 65 வயதுக்குட்பட்ட யாத்திரிகர்களில் கொரோனா வைரஸுக்கு எதிராக முழுமையாக தடுப்பூசி போடப்பட்ட அல்லது நோய்த்தடுப்பு மற்றும் நாள்பட்ட நோய்களால் பாதிக்கப்படவில்லையென்பதை உறுதி செய்தவர்களே 2022 இல் ஹஜ் கடமைக்கு அனுமதிக்கப்பட்டனர்.

2023 ஆம் ஆண்டு ஜூன் 26 ஆம் திகதி ஹஜ் சீசன் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (அ)



## இரு பிரிட்டன் பிரஜைகளை உக்ரைனில் காணவில்லை!

கீவ், ஜன. 11

உக்ரைனின் கிழக்கு டொனெட்ஸ்க் பகுதியில் இரண்டு பிரிட்டன் பிரஜைகள் காணாமல் போயுள்ளதாக உக்ரைன் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

48 வயதான ஆண்ட்ரூ பாக்ஷா மற்றும் 28 வயதான கிறிஸ்டோபர் பாரி ஆகிய இரு தன்னார்வப் பணியாளர்களே இவ்வாறு காணாமல் போயுள்ளனர்.

சனிக்கிழமை உள்ளூர் நேரப்படி மாலை 5:15 இற்கு காணாமல்போனவர் குறித்த புகாரைப் பெற்றதாக பக்முட் நகர பொலிஸ்துறை கூறியது.

இறுதியாக கடந்த வெள்ளிக்கிழமை சோலேடார் நகருக்குச் சென்று கொண்டிருந்தபோதே அவர்கள் காணாமல் போயிருக்கக் கூடுமெனவும் அவர்கள் குறித்த தகவல் தெரியுமாயின் தம்மிடம் அறிவிக்குமாறும் பொலிஸார் கேட்டுள்ளனர்.

சமீப நாட்களில் ரஷ்யாவின் தொடர்ச்சியான ஏவுகணைத் தாக்குதல்களை எதிர்கொண்டுவரும் கிராமடோர்ஸ்கில் இவர்கள் இருவரும் இருந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரஷ்யாவிற்கு எதிரான போர் அதன் 11ஆவது மாதமாக தொடர்வதால், தற்போது நடைபெற்று வரும் பல்வேறு நகரங்கள் மீதான தாக்குதல்கள் காரணமாக உக்ரைனுக்கான அனைத்து பயணங்களுக்கும் எதிராக பிரிட்டிஷ் வெளியுறவு அலுவலகம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

உக்ரைனில் இருக்கும் பிரிட்டன் பிரஜைகள் உடனடியாக வெளியேற வேண்டும் என்றும், உயிருக்கு உண்மையான ஆபத்து இருப்பதாகவும் அது கூறுகிறது. (அ)

### ஆசிரியர்கள் வெளிநடப்பினால்

# ஸ்கொட்லாந்து முழுவதும் ஆரம்பப் பள்ளிகள் பூட்டு!

ஊதியம் தொடர்பான பிரச்சினையால் ஆசிரியர்கள் வெளிநடப்பு செய்ததால் ஸ்கொட்லாந்து முழுவதும் உள்ள ஆரம்ப பாடசாலைகள் நேற்று செவ்வாய்க் கிழமை மூடப்பட்டன.

நேற்று முன் தினம் நடைபெற்ற தொழிற்சங்கங்களுக்கும் ஸ்கொட்லாந்து அரசாங்க அதிகாரிகளுக்கும் இடையிலான இறுதிப் பேச்சுவார்த்தைகள் வேலை நிறுத்த நடவடிக்கையைத் தடுக்கத் தோல்வியடைந்தன.

அத்துடன் இன்று புதன்கிழமை ஸ்கொட்லாந்தின் மேல்நிலைப் பாடசாலைகளிலும் வெளிநடப்பு செய்யவுள்ளனர்.

ஸ்கொட்லாந்தின் கல்வி நிறுவனம், அடுத்த வாரம் மேலும் வேலைநிறுத்தங்கள் முன்னெடுப்பதற்கு முன்னர் இன்னும் ஒரு தீர்வை எதிர்பார்க்கிறோம் என்று கூறியது.

வேலைநிறுத்தங்களில் ஸ்கொட்டிஷ் இடைநிலை ஆசிரியர் சங்கம் மற்றும் தலைமை ஆசிரியர்கள் மற்றும் பிரதிநிதிகள் சங்கம் சங்கங்களின் உறுப்பினர்கள் உள்ளனர்.

அவர்கள் 10 சதவீத ஊதிய உயர்வை நிராகரித்துள்ளனர்.



சமீபத்திய சலுகையில் குறைந்த ஊதியம் பெறும் ஊழியர்களுக்கு 6.85 சதவீதம் வரை உயர்வு உள்ளது.

இந்த வேலைநிறுத்தங்கள் ஸ்கொட்லாந்தில் உள்ள அனைத்து பாடசாலைகளையும் மூடும் வகையில் உள்ளது. (அ)



# நியூசிலாந்து அணியை வீழ்த்தியது பாகிஸ்தான்!

கராச்சி, ஜன. 11

நசீம் ஷாவின் துல்லியமான பந்துவீச்சு, முஹமட் றிஸ்வான், பாபர் அஸாம், பஹார் ஷமான் ஆகியோரின் கூட்டு துடுப்பாட்டம் கைகொடுக்க நியூசிலாந்துக்கு எதிரான முதல் ஒருநாள் போட்டியை இலகுவாக வென்றது பாகிஸ்தான் அணி.

பாகிஸ்தான் சென்றுள்ள நியூசிலாந்து அணி தற்போது ஒருநாள் தொடரில் விளையாடுகிறது. முதல் போட்டி நேற்று முன்தினம் கராச்சி மைதானத்தில் பகல் - இரவு ஆட்டமாக நடந்தது.

நாணயச் சுழற்சியில் வென்ற பாகிஸ்தான் அணி முதலில் நியூசிலாந்தை துடுப்பெடுத்தாடப் பணித்தது. இதன்படி துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி 9 விக்கெட்டுக்களை இழந்த 255 ஓட்டங்களை குவித்தது.

அந்த அணிக்காக ஒருவர்கூட அரைச்சதம் அடிக்கவில்லை. மைக்கல் பிரேஸ்வெல் (43), ரொம் லதம் (42) 40 ஓட்டங்களைக் கடந்தனர்.

பந்துவீச்சில் பாகிஸ்தானின் இளம் வேகப்பந்து வீச்சாளரான நசீம் ஷா 5 விக்கெட்களை வீழ்த்தி அசத்தினார். அவரைத் தவிர உஸாமா மிர் 2 விக்கெட்களை கைப்பற்றினார்.

சுமாரான ஓட்ட இலக்கை நோக்கி பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் 48.1 ஓவர்களில் 4 விக்கெட்களை மாத்திரம் இழந்து 258 ஓட்டங்களை குவித்து 6 விக்கெட்களால் வெற்றியீட்டியது.

துடுப்பாட்டத்தில் முஹமட் றிஸ்வான் ஆட்டமிழக்காமல் 77 ஓட்டங்களையும், அணித்தலைவர் பாபர் அஸாம் 66 ஓட்டங்களையும், பஹார் ஷமான் 56 ஓட்டங்களையும் விளாசினர்.

பந்துவீச்சில் மைக்கல் பிரேஸ்வெல் 2 விக்கெட்களையும், ரிம் சௌதி, கிளென் பிலிப்ஸ் தலா ஒவ்வொரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இந்த வெற்றியின் மூலம் பாகிஸ்தான் அணி 3 போட்டிகள் கொண்ட சர்வதேச ஒரு நாள் தொடரை 1 க்கு 0 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கிறது. இரண்டாவது ஒருநாள் போட்டி இன்று நடக்கும். (ஐ)

# சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து டுவைன் பிரிட்டோரியஸ் ஓய்வு

ஜொகன்னர்ஸ்பேர்க், ஜன. 11

தென்னாபிரிக்க கிரிக்கெட் அணியின் சகலதுறை வீரரான டுவைன் பிரிட்டோரியஸ் தொழில்முறை ரீதியிலான இருபது - 20 கிரிக்கெட்டில் கவனம் செலுத்தும் விதமாக, அனைத்துவிதமான சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் இருந்தும் ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.

33 வயதான டுவைன் பிரிட்டோரியஸ் தென்னாபிரிக்க அணிக்காக 30 சர்வதேச இருபது - 20 கிரிக்கெட் போட்டி, 27 ஒருநாள் கிரிக்கெட் போட்டி, 3 டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளில் விளையாடியுள்ளார். கடந்த ஆண்டு பாகிஸ்தானுக்கு எதிராக நடைபெற்ற இருபது - 20 கிரிக்கெட் ஆட்டத்தில் பிரிட்டோரிஸ் 17 ஓட்டங்களை விட்டுக்கொடுத்து 5 விக்கெட்களை வீழ்த்தியிருந்தார். இதன் மூலம் சர்வதேச இருபது - 20 கிரிக்கெட்டில் தென்னாபிரிக்க வீரர்களில் சிறந்த பந்து வீச்சு சாதனையை பதிவு செய்திருந்தார்.

டுவைன் பிரிட்டோரியஸ் கூறும்போது, “சர்வதேச கிரிக்கெட்டின் அனைத்து வடிவங்களில் இருந்தும் ஓய்வு பெற முடிவு செய்துள்ளேன். இனிமேல் தொழில்முறை இருபது - 20 லீக்குகளிலும் மற்ற குறுகிய வடிவிலான கிரிக்கெட்டிலும் எனது கவனத்தை செலுத்தப் போகிறேன்” என்றார். (ஐ)





# நியூசிலாந்து அணியின் மேட் ஹென்றி விலகல்!

ஒக்லாந்து, ஜன. 11

இந்தியாவுக்கு எதிரான ஒருநாள் கிரிக்கெட் போட்டித் தொடரில் காயம் காரணமாக விலகிய நியூசிலாந்து அணியின் சகலதுறை வீரர் மேட் ஹென்றிக்கு பதிலாக வேகப்பந்து வீச்சாளர் டக் பிரேஸ்வெல் அணியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

பாகிஸ்தான் அணிக்கு எதிரான 2ஆவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் போது மேட் ஹென்றிக்கு வயிற்று பகுதியில் வலி ஏற்பட்டது. இதைத் தொடர்ந்து அவருக்கு 2 முதல் 4 வார காலங்கள் ஓய்வு தேவை என மருத்துவர்கள் அறிவுரை வழங்கினர். இதனால் பாகிஸ்தான் மற்றும் இந்தியாவுக்கு எதிரான ஒருநாள் கிரிக்கெட் போட்டி தொடர்களில் இருந்த ஹென்றி விலகினார்.

இந்நிலையில், அவருக்கு பதிலாக டக் பிரேஸ்வெல் அணியில் சேர்க்கப்பட்டுள்ளார். 32 வயதான பிரேஸ்வெல் கடைசியாக கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் நெதர்லாந்துக்கு எதிரான ஒருநாள் போட்டித் தொடரில் விளையாடி இருந்தார்.

இந்தியா - நியூசிலாந்து அணிகள் இடையிலான 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் கிரிக்கெட் போட்டித் தொடர் வரும் 18ஆம் திகதி ஹைதராபாத்தில் தொடங்குகிறது.

# அடிலெய்ட் ரென்னிஸ் சானியா இணை தோல்வி



அடிலெய்ட், ஜன. 11

அடிலெய்ட் சர்வதேச டென்னிஸ் தொடரில் மகளிர் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் சானியா மிர்சா, கஜகஸ்தானின் அனா டானிலினா ஜோடி முதல் சுற்றிலேயே தோல்வி அடைந்தது.

அவுஸ்திரேலியாவின் அடிலெய்ட் நகரில் நடைபெற்று வரும் இந்தத் தொடரில் மகளிர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்றில் செக் குடியரசின் பெட்ரா விட்டோவா 6-3, 7-5 என்ற நேர் செற்றில் 23ஆம் நிலை வீராங்கனையான கஜகஸ்தானின் எலெனா ரைபகினாவை வீழ்த்தினார்.

மற்றொரு செக் குடியரசு வீராங்கனையான கரோலினா பிளிஸ்கோவா 2-6, 4-6 என்ற நேர் செற்றில் அமெரிக்காவின் டேனியல் காலின்ஸிடம் தோல்வியடைந்தார்.

மகளிர் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் சானியா மிர்சா, கஜகஸ்தானின் அனா டானிலினா ஜோடி தங்களது முதல் சுற்றில் செக் குடியரசின் பார்போரா கிரெஜ்சிகோவா, ஸ்டிரோம் ஹண்டர் ஜோடியை எதிர்த்து விளையாடியது. சுமார் ஒரு மணி நேரம் 20 நிமிடங்கள் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் சானியா மிர்சா, அனா டானிலினா ஜோடி 6-3, 3-6, 6-10 என்ற செற் கணக்கில் தோல்வி அடைந்தது.

# இருபது - 20 கிரிக்கெட்டில் ரோஹித் தொடர்வாரா?




மும்பை, ஜன. 11

இருபது - 20 கிரிக்கெட்டில் விளையாடுவது குறித்த கேள்விக்கு இந்திய அணியின் அணித்தலைவர் ரோஹித் சர்மா பதில் அளித்துள்ளார்.

இலங்கைக்கு எதிரான இருபது - 20 தொடரை 2-1 என வென்றது இந்திய அணி.

இந்தத் தொடரில் பாண்ட்யா கேப்டனாகச் செயல்பட்டார். இதையடுத்து இருபது - 20 கிரிக்கெட்டில் தொடர்ந்து விளையாடுவது குறித்து ரோஹித் சர்மா கூறியதாவது:

இது ஒருநாள் போட்டி உலகக் கிண்ணத்துக்கான வருடம். சிலரால் எல்லா வகையான கிரிக்கெட் ஆட்டங்களிலும் விளையாட முடியாது. அட்டவணையைப் பார்த்தாலே தெரியும். அடுத்தடுத்து ஆட்டங்கள் நடைபெறுகின்றன. சிலருடைய பணிச்சுமையைக் கருதி அவர்களுக்கு ஓய்வு அளிக்கிறோம். எனக்கும் அப்படித்தான்.

6 இருபது - 20 போட்டிகள்தான் உள்ளன. அதில் 3 போட்டிகள் முடிவடைந்து விட்டன. நியூசிலாந்துக்கு எதிராக மேலும் 3 இருபது - 20 போட்டிகள் உள்ளன. ஐ. பி. எல். போட்டி தொடங்கும்வரை வீரர்களைக் கவனித்துக்கொள்ள வேண்டும். அதற்குப் பிறகு என்ன நடக்கிறது என்று பார்க்கலாம். ஆனால் இருபது - 20 கிரிக்கெட்டை நான் விட்டுவிடவில்லை - என்றார். (ஐ)

# வடக்கு - கிழக்கு ஒருங்கிணைப்பு குழுவின் கவனவீர்ப்பு போராட்டம் கிளிநொச்சியில்!



கிளிநொச்சி, ஜன. 11

வடக்கு-கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் தொடர் கவனயீர்ப்புப் போராட்டம் கிளிநொச்சியில் 6ஆம் நாளாக நேற்று செவ்வாய்க் கிழமை முன்னெடுக்கப்பட்டது.

இந்தப் போராட்டம் நேற்று முற்பகல் 10.30 மணியளவில் கிளிநொச்சி பழைய மாவட்ட செயலகம் முன்பாக பேரணியாக ஆரம்பிக்கப் பட்டு ஏ-9 வீதி ஊடாக டிப்போ சந்தியில் கவனயீர்ப்பு முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது, பல்வேறு விடயங்களை உள்ளடக்கிய பதாதைகளை மக்கள் ஏந்தியிருந்ததுடன், அமைதியாக போராடினர்.

ஐக்கிய இலங்கைக்குள் ஒருங்கிணைந்த வடக்கு கிழக்கு மாகாணத்துக்கு மீளப்பெற முடியாத சமஷ்டியை வலியுறுத்துவதற்கு அனைத்து தமிழ் அரசியல் கட்சிகளையும் ஓரணியில் இணைய வலியுறுத்தியே இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.

இந்தப் போராட்டத்தில் மாவட்டத்தின் பல்வேறு பிரதேசங்களிலிருந்து மக்கள் கலந்து கொண்டனர். (அ)



# முட்டை விலை குறைகிறது!

கொழும்பு, ஜன. 11

எதிர்வரும் சனிக்கிழமை முதல் முட்டை ஒன்றின் மொத்த விலையை ஐந்து ரூபாவால் குறைக்க அகில இலங்கை முட்டை வர்த்தக சங்கம் தீர்மானித்துள்ளது.

இதன்படி, எதிர்வரும் சனிக் கிழமை முதல் 45 ரூபா என்ற மொத்த விலைக்கு முட்டை விற்பனை செய்யப்படவுள்ள தாக அந்த சங்கத்தின் தலைவர் என்டன் நிஷாந்த அப்புஹாமி தெரிவித்தார்.

முட்டை உற்பத்தியாளர்கள் பாரவூர்திகள் மூலம் முட்டையை விற்பனை செய்யும் பின்னணியில் இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, முட்டை இறக்குமதி கேள்விப் பத்திரத் திற்கமைவாக 20 பேர் விலை மனுக்களை கையளித்துள்ளனர்.


நேற்றுமுன்தினம் பிற்பகலுடன் அது தொடர்பான விலை மனுக்கோரல் செயற்பாடுகள் நிறைவுறுத்தப்பட்டன.

இது தொடர்பான விலை மனுக்கோரல்கள் இறுதி அனுமதிக்காக வர்த்தக அமைச்சின் தொழில்நுட்ப குழுவிடம் கையளிக்கப்பட்டதாக இலங்கை அரச வர்த்தக கூட்டுத்தாபனத் தின் தலைவர் ஆசிரி வலிசுந்தர தெரிவித்தார்.

முட்டை இறக்குமதிக்காக விலை மனுக்களை கையளித்த அனைத்து இறக்குமதியாளர்க ளும் சர்வதேச ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட தரச்சான்றிதழ் களை முன்வைத்துள்ளனர்.

அதில் பெரும்பாலான விண்ணப்பதாரிகள் இந்தியர்கள் என அரச வர்த்தக கூட்டுத்தாபனத்தின் தலைவர் ஆசிரி வலிசுந்தர கூறினார். (அ)

# தமிழ் அரசியல் கைதி ஆதித்யன் 14 வருடங்களுக்கு பின் விடுதலை!



கொழும்பு, ஜன. 11

**விடுதலைப் புலிகளுக்கு அதி நவீன தொழில்நுட்ப கருவிகளைக் கடத்தியதாக 2009 ஆம் ஆண்டு கைதுசெய்யப்பட்ட வழக்கில், தமிழ் அரசியல் கைதி ஒருவர் 14 வருடங்களின் பின்னர் விடுதலை செய்யப்பட்டார்.**

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்திற்காக 2007ஆம் ஆண்டு சிங்கப்பூரிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட கையடக்க வானொலிகள் உட்பட சில நவீன தொழில்நுட்ப உபகரணங்களை தமிழீழ விடுதலைப் புலிகள் தலைமையத்தில் ஒப்படைக்க வவுனியா இரட்டைப் பெரியகுளத்தடியில் லொறியில் வரும்பொழுது வவுனியா பொலிஸாரினால் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டு மேலதிக விசாரணைக்காக கொழும்பு குற்றப் புலனாய்வுத்துறைக்கு கையளிக்கப்பட்டதாக பொலிஸார் குற்றம்சாட்டினர்.

2009 ஆம் ஆண்டு இந்த குற்றச்சாட்டுக்களுக்காக பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுத்து வைத்து விசாரணை செய்யப்பட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரான கனகரத்தினத்தின் மகனான ஆதித்யன் கொழும்பு நீதவான் நீதிமன்றின் நீதிபதியினால் 14 வருடங்களின் பின்னர் நிரபராதியென நேற்று விடுதலை செய்யப்பட்டார்.

இவ்வழக்கின் எதிரியான கனகரத்தினம் ஆதித்யன் சார்பில் சட்டத்தரணி பிருந்தா சந்திரகேஸ் அனுசரணையில் ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசா மன்றில் ஆஜராகினார்.

இதேவேளை, ஏனைய வழக்குகளில் அவர் தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டுள்ளார். அவர் தொடர்பான மற்றொரு வழக்கு இன்று விசாரணைக்கு வருகிறது. (அ)

# ஷாப்டர் மரணம் தற்கொலையா?

## தீர்மானிக்கப்படவில்லை என்கின்றனர் பொலிஸார்



கொழும்பு, ஜன. 11

தொழிலதிபர் தினேஷ் ஷாப்டரின் மரணம் தொடர்பான விசாரணையில் இது தற்கொலையா அல்லது கொலையா என்பது இன்னும் முடிவு செய்யப்படவில்லை என்றும், மரணத்துக்கான காரணத்தை கண்டறிய விசாரணை இன்னும் நடந்து வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

ஷாப்டரின் மரணம் தொடர்பாக குற்றப் புலனாய்வுப் பிரிவினர் இதுவரை 175 இற்கும் மேற்பட்ட வாக்குமூலங்களைப் பதிவு செய்துள்ள தாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

ஷாப்டரின் மரணம் தற்கொலை என்று விசாரணையில் தெரியவந்துள்ளதாக சில செய்திகளுக்கு பதிலளித்த பொலிஸ் ஊடகப் பேச்சாளர், ஷாப்டர் தற்கொலை செய்து கொண்டதாக பொலிஸார் இன்னும் முடிவு செய்யவில்லை என்றார்.

மேலதிக விசாரணைகள் நடைபெற்று வருவதாகவும், கிட்டத்தட்ட 175 வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

முன்னதாக, வர்த்தகர் தினேஷ் ஷாப்டரின் இரத்த மாதிரிகள் மற்றும் பிற உடல் பாகங்களை டி.என்.ஏ. பரிசோதனை செய்யுமாறு கொழும்பு பிரதான நீதவான் அரசாங்க பகுப்பாய்வாளருக்கு உத்தரவிட்டார்.

குறைந்தபட்சம் 14 மாதிரிகள் பரிசோதனைக்காக அரசாங்க ஆய்வாளருக்கு அனுப்பப்பட்டுள்ளதாக பேச்சாளர் கூறினார்.

மேலும், தொலைபேசி பகுப்பாய்வு, வங்கி அறிக்கை மற்றும் பல்வேறு ஆவணங்கள் பெறப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

நேரடி ஆதாரங்களைக் கண்டறிய விசாரணை நடத்தப் படுகின்றது என்றார். எனினும், இது தற்கொலையா அல்லது கொலையா என்பது உறுதிப் படுத்தப்படவில்லை. இதுவரை சந்தேகத்தின் பேரில் எவரும் அடையாளம் காணப்படவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

52 வயதான வர்த்தகர் கடந்த வருடம் டிசெம்பர் மாதம் 15 ஆம் திகதி பொரளை பொது மயானத்தில் சாரதி ஆசனத்தில் மற்றும் கழுத்தில் கம்பியினால் கட்டப்பட்ட நிலையில் பலத்த காயங்களுடன் காணப்பட்டார். கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் அவர் உயிரிழந்துள்ளார். (அ)

# சேபால் அமரசிங்கவின் விளக்கமறியல் நீடிப்பு!

கொழும்பு, ஜன. 11

சமூக செயற்பாட்டாளர் சேபால் அமரசிங்கவின் விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய அவரை எதிர்வரும் 17 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு நீதவான் நீதிமன்றம் நேற்று செவ்வாய்க்கிழமை உத்தரவிட்டது.

பௌத்த மதத்தின் புனிதத்தை அவமதிக்கும் வகையில் கருத்து வெளியிட்ட குற்றச்சாட்டின் அடிப்படையில் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் சேபால் அமரசிங்க கைது செய்யப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# அரச ஊழியர்களுக்கு சம்பளம் வழங்குவதில் சிக்கல் நிலைமை

கொழும்பு, ஜன. 11

திறைசேரி தற்போது பாரிய நிதி நெருக்கடியை எதிர்கொண்டுள்ளதாக ஜனாதிபதி, அமைச்சரவைக்கு அறிவித்துள்ளார் என அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக் களத்தில் நேற்று செவ்வாய்க் கிழமை இடம்பெற்ற ஊடக வியலாளர்கள் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதன் காரணமாக ஜனவரி, பெப்ரவரி மாதங்களில் அரச ஊழியர்களுக்கு சம்பளம் வழங்குவதில் பாரிய சிக்கல் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார். (அ)



## உள்ளூராட்சி...

எம். ஏ. சுமந்திரன், ரெலோ சார்பில் அதன் தலைவர் செல்வம் அடைக்கலநாதன், கோவிந்தன் கருணாகரம், ஹென்றி மகேந்திரன், புளொட் சார்பில் நல்லை நாதர் ராகவன் ஆகியோர் பங்கேற்றிருந்தனர். உடல் நலக் குறைவு காரணமாக புளொட் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன் இந்த கலந்துரையாடலில் பங்கேற்கவில்லை.

இந்தக் கூட்டத்தில், நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தலில் எவ்வாறு போட்டியிடுவது என்பது தொடர்பில் நீண்ட நேரம் விவாதிக்கப்பட்டது.

இதன்போது, கடந்த தேர்தலை எதிர்கொண்டதைப் போல எதிர்கொள்ளலாம் என ரெலோ முன்மொழிந்தது.

எனினும், கடந்த முறை தமக்கு உறுதியளிக்கப்பட்ட சபைகள் தேர்தல் வெற்றியின் பின்னர் வழங்கப்படாததால், அது பற்றி மீளப் பேசப்பட வேண்டும் என புளொட் கட்சி தெரிவித்தது.

எனினும், தேர்தல் நெருங்கிவிட்டதால், அதைபற்றி பேச அவகாசமில்லை என்று தமிழரசு கட்சி கூறியது.

இறுதியில் - எவ்வாறாயினும், தாம் தனித்தே போட்டியிடப் போவதாகத் தமிழரசு கட்சி தனது தீர்மானத்தை அறிவித்தது.

இதைத் தொடர்ந்து - கூட்டமைப்பின் ஏனைய பங்காளிக் கட்சிகளான ரெலோ, புளொட் ஆகியன, தொடர்ந்தும் சேர்ந்து போட்டியிடுவதா அல்லது தாமும் தனித்தனியாகவே போட்டியிடுவதா என்பது குறித்து தமக்குள் பேசித் தீர்மானம் எடுப்பர் என்றும் முடிவானது.

அத்துடன் - "தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு" என்ற பெயரைப் பயன்படுத்தி உள்ளூராட்சி சபைத் தேர்தலில் எவரும் போட்டியிடுவதில்லை என்றும் இந்தக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டதாக தமிழரசு கட்சி கூறியது. ஆனால், "அவ்வாறான எத்தகைய விடயமும் பேசப்படவே இல்லை", என்று ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

**பின்னணி**

கடந்த 2001ஆம் ஆண்டு தேர்தல் மூலம் தமிழீழ விடுதலைப் புலிகளின் முழு ஆதரவுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தேர்தல் அரசியலுக்கு அறிமுகமானது. ஆரம்பத்தில் தமிழர் விடுதலை கூட்டணி, அகில இலங்கை தமிழ் காங்கிரஸ், ஈ. பி. ஆர். எல். எவ்., ரெலோ ஆகிய கட்சிகள் கூட்டமைப்பில் அங்கம் வகித்திருந்தன.

2004ஆம் ஆண்டு தேர்தலில் தமிழர் விடுதலை கூட்டணி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து விலகியதைத் தொடர்ந்து இலங்கை தமிழரசு கட்சி மீட்டெடுக்கப்பட்டு, அந்தக் கட்சியின் பெயர், சின்னத்திலேயே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு போட்டியிட்டு வந்தது.

2010ஆம் ஆண்டு அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சி வெளியேறியது. 2011 உள்ளூராட்சி தேர்தலில் தமிழர் விடுதலை கூட்டணி, புளொட் ஆகிய கட்சிகள் உள்வாங்கப்பட்டு 2013 மாகாண சபை தேர்தலை தொடர்ந்து கூட்டணி பிரிந்து சென்றது. 2015ஆம் ஆண்டு ஈ. பி. ஆர். எல். எவ் கூட்டமைப்பிலிருந்து வெளியேறியது என்பதும் குறிப்பிடத்தக்கது.

## த. தே. கூட்டமை...

என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் தொடர்பில் இலங்கை தமிழரசுக் கட்சியின் பெரும்பான்மையினர் தனி வழியில் செல்வதற்கு ஆதரவை வெளிப்படுத்தியுள்ள நிலையில் அவர் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தின் இறுதி முடிவு என்னவென்று வினவியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய குழுக்கூட்டத்தில் இம்முறை உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் உள்ள கட்சிகள் தனித்தனியாக முகங்கொடுக்க வேண்டும் என்று பெரும்பான்மையானவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

அதுதொடர்பில் பங்காளிக்கட்சிகளுடன் நாம் நீண்ட நேரம் ஆராய்ந்திருந்தோம். அதனால் ஏற்படுகின்ற சாதக, பாதக நிலைமைகள் தொடர்பில் கவனம் செலுத்தியிருந்தோம்.

இந்நிலையில், குறித்த விடயம் சம்பந்தமாக அந்தந்தக் கட்சிகளின் நிலைப்பாடுகள் மற்றும் எனது கருத்துக்கள் தொடர்பில் வெளிப்படுத்துவதற்கு நான் அவசரப்படவில்லை. அதுகுறித்து விரைவில் உத்தியோகபூர்வமான அறிவிப்பை விடுக்கவுள்ளேன் - என்றார். (ஐ)

## மகிந்த,...

களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளதாக கனடா வெளிவிவகார அமைச்சர் மெலனி ஜோலி நேற்று செவ்வாய்க் கிழமை விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நான்கு பேருக்கும் எதிராக கனடா அரசாங்கம் விதித்துள்ள தடைகள், இலங்கையில் பொறுப்புக்கூறலுக்கான முக்கியமான அடுத்தபடியாகும் என கனடா அரசாங்கத்தின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சிறப்புப் பொருளாதார ஏற்பாடுகள் சட்டத்தின் விதிகள் தடை விதிக்கப்படுவோருடனான வணிக தொடர்புகள் தடை செய்யப்படும். கனடாவில் இருக்கக் கூடிய அவர்களின் சொத்துக்கள் தடுத்து வைக்கப்படும். மேலும், குடிவரவு மற்றும் அகதிகள் பாதுகாப்புச் சட்டப்படி அவர்கள் கனடாவுக்குள் அனுமதிக்கப்படுவதும் தடுக்கப்படுகிறது.

இலங்கையில் 1983 - 2009 ஆம் ஆண்டு வரை இடம்பெற்ற ஆயுதப் போரின்போது புரியப்பட்ட பாரதூரமான மற்றும் கட்டமைக்கப்பட்ட மனித உரிமைகள் மீறல்களுக்குப் பொறுப்பானவர்கள் என்ற வகையிலேயே முன்னாள் ஜனாதிபதிகளான கோட்டாபய, மகிந்த ராஜபக்ச மற்றும் இரண்டு முன்னாள் படை அதிகாரிகளுக்கும் தடை விதிக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ)

## யானை - மொட்டு...

கட்சியும் இணைந்து போட்டியிட தீர்மானித்துள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து மாவட்ட தலைவர்களுடனும் ஆலோசிக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

யானை சின்னத்தில் போட்டியிடும் உள்ளூராட்சி மன்றங்கள் எவை, மொட்டு சின்னத்தில் போட்டியிடக்கூடியவை எவை என்பது குறித்தும் கலந்துரையாடப்பட்டதாகவும் அவர் கூறினார்.

இதன்படி கொழும்பு, கண்டி மாநகர சபைகளிலும், புத்தளம் நகர சபையிலும் யானை சின்னத்தில் போட்டியிட ஐக்கிய தேசிய கட்சி, சிறீ லங்கா பொதுஜன பெரமுன இணக்கம் எட்டியுள்ளன.

அத்துடன், சில உள்ளூராட்சி மன்றங்களில் பொதுவான சின்னத்தைப் பயன்படுத்துவது தொடர்பாகவும் உடன்பாடு எட்டப்பட்டதாக அவர் மேலும் தெரிவித்தார். (ஐ)

## தேர்தல்...

என்று அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையிலேயே, கட்டுப்பணம் பெறுவதை தற்காலிகமாக இடைநிறுத்துமாறு மாவட்ட செயலாளர்களுக்கு பொது நிர்வாக அமைச்சு கடிதங்களை அனுப்பியுள்ளது. முன்னரே இந்தக் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்றும் அறிய வருகிறது. (ஐ)

## கூட்டமைப்பு...

பில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி உள்ளிட்ட வேறு சில கட்சிகளையும் இணைத்து போட்டியிடுவதற்கான பேச்சுகள் தொடர்வதாக ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதன், பேச்சாளர் சுரேந்திரன் ஆகியோர் தெரிவித்தனர். (ஐ)

# ஹிஸ்புல்லா மீண்டும் முஸ்லிம் காங்கிரஸில்!



நிந்தவூர், ஜன. 11

கிழக்கின் பிரபல முஸ்லிம் அரசியல் வாதியும் முன்னாள் அமைச்சருமான காத்தான்குடி எம். எல். ஏ. எம். ஹிஸ்புல்லா நேற்று செவ்வாய்க்கிழமை முஸ்லிம் காங்கிரஸுடன் மீண்டும் இணைந்து கொண்டார்.

இந்த இணைவு தொடர்பான நிகழ்வு ஒன்று நேற்று இரவு வளைச்சேனை காவத்தமுனையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் தலைவர் ஹக்கீமுடன் கட்சியின் உயர்மட்ட பிரமுகர்கள், ஆதரவாளர்கள் பலரும் கலந்து கொண்டனர். (ஐ-06)

# முஸ்லிம் காங்கிரஸ் தனித்தே போட்டி

நிந்தவூர், ஜன. 11

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் முஸ்லிம் காங்கிரஸ் வடக்கு, கிழக்கில் தனித்தே போட்டியிடுமென கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் அறிவித்துள்ளார்.

நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்ற முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் அம்பாறை மாவட்ட செயற்குழுக் கூட்டத்தில் தலைவர் ஹக்கீம் இந்த முடிவை அறிவித்தார்.

மேற்படி முஸ்லிம் காங்கிரஸின் அம்பாறை மாவட்ட செயற்குழுக் கூட்டம் கட்சியின் தவிசாளர் ஏ. எல். அப்து மஜீத் தலைமையில், மருதமுனை பொது நூலக மண்டபத்தில் நடைபெற்றது.

கூட்டத்தில் உரையாற்றிய தலைவர் ஹக்கீம், எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் வடக்கு - கிழக்கில் கட்சியின் மரம் சின்னத்தில் தனித்தே போட்டியிடுவதாகவும், வடக்கு, கிழக்குக்கு வெளியே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்து போட்டியிடுவதற்கான ஏற்பாடுகள் உள்ளன என்றும் தெரிவித்தார்.

மேலும், இந்தக் கூட்டத்தில் அம்பாறை மாவட்டத்தில் கட்சி முன்னெடுக்க வேண்டிய செயல்பாடுகள் தொடர்பில் ஆராயப்பட்டன. உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடவடிக்கைகள், வேட்பாளர் தெரிவுகளை மேற்கொள்வதற்கென குழுக்களும் தெரிவு செய்யப்பட்டன.

முஸ்லிம் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர்களான எச்.எம்.எம்.ஹரீஸ், எம்.பைஸால் காசிம், தவிசாளர் ஏ.எல். அப்துல் மஜீத், பிரதேச செயலாளர் மன்சூர் ஏ.காதர் ஆகியோர் குறித்த தேர்தல் நடவடிக்கைக் குழுக்களை முகாமைத்துவம் செய்வரெனவும் அறிவிக்கப்பட்டது. (ஐ-06)

## தமிழ் தேசிய...

பேச்சுகளை முன்னெடுத்து வருகின்றன. இந்தக் கட்சிகள் ஒன்றாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற பெயரில் பொதுச் சின்னம் ஒன்றை தெரிவு செய்து உள்ளூராட்சி தேர்தலை சந்திப்பதற்கு இணக்கம் எட்டியுள்ளன என்றும் புதிய கூட்டமைப்பின் கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ)

## அரசுக்கு ஒருவார...

அதுவரை, இனப் பிரச்னை தீர்வு தொடர்பில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை வரை நடைபெறவிருந்த நான்கு நாட்கள் பேச்சிலும் தாம் பங்கேற்க மாட்டோம் என்று தமிழ்த் தேசியக் கட்சிகள் அறிவித்துள்ளன.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்துக்கும் தமிழ் கட்சிகளுக்கும் இடையே தேசிய இனப் பிரச்னை தீர்வு குறித்த நான்கு நாள் பேச்சு நேற்று ஆரம்பமானது.

இந்தப் பேச்சு தொடர்பில் கருத்து வெளியிட்ட சுமந்திரன், செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர்,

நேற்றைய தினம் அரசாங்கத்துடன் தேசிய இனப்பிரச்னை தீர்வு சம்பந்தமான பேச்சை முன்னெடுப்பதற்கு முன்னதாக சாதகமான சமிக்ஞைகளை காண்பிப்பதற்கு குறித்தவொரு வரையறுக்கப்பட்ட காலப்பகுதியை வழங்குவதென தமிழ்க் கட்சிகளின் தலைவர்களுக்கு இடையிலான சந்திப்பில் தீர்மானிக்கப்பட்டது.

அதற்கு அமைவாக, எதிர்வரும் 17ஆம் திகதிக்கு முன்னதாக அரசாங்கத்தால் நடைமுறை சாத்தியமாக்கக்கூடிய விசயங்கள் சம்பந்தமான பட்டியல் ஒன்றைக் கோரியுள்ளோம். இன்றைய பேச்சிலும் எவ்விதமான முன்னேற்றங்களும் இடம்பெற்றிருக்கவில்லை.

வழமைபோன்றே, தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை தொடர்பில் முதலில் ஐந்து பேரை விடுதலை செய்வது தொடர்பாகக் கேட்டபோது சில நாட்களுக்குள் விடுவிப்பதாக கூறினார்கள். ஆனால், அதுகுறித்து உறுதியான பதிலளிப்பதாகத் தெரியவில்லை.

காணி அபகரிப்பை உடன் நிறுத்துவதும், அபகரிக்கப்பட்ட காணிகளை மீள விடுவித்தல் தொடர்பில் பேசியபோது, எதிர்வரும் 15ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெறுகின்ற தேசிய தைப்பொங்கல் விழாவில் பங்கேற்க ரணில் விக்கிரமசிங்க வருகை தரவுள்ள நிலையில் அங்குள்ள படை அதிகாரிகளுடன் பேச்சக்களை முன்னெடுப்பார் என்று கூறினர்.

அடுத்து, வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் குறித்து பேசப்பட்டபோது சட்டவரைவு தொடர்பில் கவனம் செலுத்துவதாகக் கூறினார்கள். அப்போது, சட்டவரைவாக இருந்தால் அவற்றின் நகலை முன்கூட்டியே எமக்கு காண்பிக்க வேண்டும் என்று கோரினோம்.

அதற்கு அடுத்தபடியாக அரசமைப்பில் உள்ள அதிகாரப் பகிர்வு குறித்த விடயத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கான ஒரு முறைமையை வெளிப்படுத்துமாறு கோரியுள்ளோம். அதற்கான கால எல்லை உள்ளிட்டவை அதில் காணப்படுகின்றன. இந்த விசயங்கள் தொடர்பில் முன்னேற்றகரமான சமிக்ஞைகள் அல்லது செயல்பாடுகள் ஆகக் குறைந்தது திட்ட வழிபடம் ஒன்றையாவது வெளிப்படுத்தினால் மேலதிகமாக பேசமுடியும் என்றும் அதற்காக ஒரு வாரத்தை வழங்குவதாகவும் நாம் தெரிவித்துள்ளோம்.

இதனடிப்படையில், தேசிய இனப் பிரச்னை தொடர்பில் தொடர்ச்சியாக நடைபெறவிருந்த பேச்சு முதல்நாளுடன் நிறைவுக்கு வந்துள்ளது. அரசாங்கம் குறிப்பிட்ட கால வரையறைக்குள் சாதகமான சமிக்ஞையை வெளிப்படுத்தினால் தொடர்ச்சியாகப் பேசுவோம் - என்று கூறினர். (ஐ)

ஈழநாடு
Eelanadu

# திருத்திய மின் கட்டணம் ஜனவரி 1 முதல் அமுலுக்கு!

## நேற்று அறிவித்தார் அமைச்சர் பந்துல



**கொழும்பு, ஜன. 11**

**திருத்தப்பட்ட மின்சார கட்டணங்கள் ஜனவரி முதலாம் திகதி முதல் அமுலுக்கு வரும் என அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.**

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சரினால் முன்வைக்கப்பட்ட பிரேரணையின் பிரகாரம் ஜனவரி முதலாம் திகதி முதல் புதிய கட்டணங்கள் அமுல்படுத்தப்படும் எனவும் அவர் கூறினார்.

இந்த திருத்தங்கள் முன்வைக்கப்பட்டுள்ளபோதிலும், இந்த விடயம் தொடர்பில் இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவுடன் மேலதிக கலந்துரையாடல்களை மேற்கொள்ளவுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

மாற்று முன்மொழிவுகளை வழங்க இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு மற்றும் பிற அமைப்புகளுக்கு எதிர்வரும் 15 ஆம் திகதி வரை கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது எனவும் அமைச்சர் தெரிவித்தார்.



# யாழ்.கலாசார மத்திய நிலையத்தை பெப்.11 திறந்து வைக்கிறார் ரணில்!

யாழ்ப்பாணம், ஜன. 11

யாழ்ப்பாணத்தில் இந்திய அரசினால் நிர்மாணிக்கப்பட்ட கலாசார மத்திய நிலையத்தை எதிர்வரும் பெப்ரவரி மாதம் 11ஆம் திகதி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வைபவ ரீதியாக திறந்து வைக்கவுள்ளதுடன் கலாசார மத்திய நிலையத்தின் செயற்பாடுகளையும் ஆரம்பித்து வைப்பார் என ஜனாதிபதியின் மேலதிக செயலாளர் எல்.இளங்கோவன் தெரிவித்தார்.

அடுத்த மாதம் 11ஆம் திகதி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பங்கேற்போடு இலங்கையின் 75 ஆவது தேசிய சுதந்திர தின நிகழ்வுகள் இம்முறை யாழ்ப்பாண கலாசார மத்திய நிலையத்தில் இடம் பெறுவதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அது தொடர்பான முன்னேற்பாட்டுக் குழுக் கூட்டம் யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை ஜனாதிபதியின் மேலதிக செயலாளர் எல்.இளங்கோவன் தலைமையில் இடம்பெற்றது.

இதில் முப்படைகளின் பிரதிநிதிகள், துறைசார் அதிகாரிகள் மற்றும் ஜனாதிபதி செயலக உத்தியோத்தர்கள் கலந்துகொண்டனர்.

இதன்போதே ஜனாதிபதியின் மேலதிக செயலாளர் இளங்கோவன் இந்தத் தகவலை வெளியிட்டார். (அ)

# உத்தேச மின்சார கட்டண உயர்வை ஏற்க பொதுப் பயன்பாடு ஆணைக்குழு மறுப்பு

கொழும்பு, ஜன. 11

உத்தேச மின் கட்டண உயர்வை ஏற்க இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு மறுத்துள்ளது.

இலங்கை மின்சார சபை கூறுவது போன்று பாரிய நட்டத்தை ஏற்படுத்தாததாலும், தவறான பெறுமதிகளின் அடிப்படையில் இந்த பிரேரணை வகுக்கப்பட்டுள்ளதாலும் உத்தேச உயர்வை ஏற்றுக்கொள்ள முடியாது என பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க கூறினார்.

மின்சார கட்டணத்தை அதிகரிப்பதற்கான தீர்மானத்தை மேற்கொள்ளும்போது நாட்டின் சாதாரண வரிக் கொள்கை மீறப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மின்சாரக் கட்டண அதிகரிப்பு தொடர்பில் அமைச்சரவையில் முன்வைக்கப்பட்ட யோசனைக்கு நேற்று முன்தினம் திங்கட்கிழமை அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் பெப்ரவரி மாதம் 15ஆம் திகதியளவில் மீள் பரிசீலனை செய்யும் அடிப்படையில் இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக அரசாங்கத்தின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

மீள்பரிசீலனையின்போது மீண்டும் மின் கட்டணம் குறைவடைவதற்கான சாத்தியம் உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ)

# திருமலை, வவுனியா ஆலயங்களுக்கு சந்நிதியான் ஆச்சிரமம் நிதியுதவி!

வடமராட்சி, ஜன. 11

தொண்டைமனாறு செல்வச் சந்நிதியான் ஆச்சிரமத்தால் திருகோணமலை - சாம்பல்தீவு பிரதேசத்தில் உள்ள இலுப்பைக்குளம் கிராமத்தில் அமைந்துள்ள மண்கிண்டி மலை ஸ்ரீ முருகன் ஆலய கட்டட பணிக்காக ஒரு இலட்சம் ரூபாய் நிதி உதவி அளிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், செல்வநாயகபுரம் பிரதேசத்தின் உதயபுரி கிராமத்தில் அமைந்துள்ள அருள்மிகு முத்துக்குமார சுவாமி ஆலய கட்டட பணிக்காக 50 ஆயிரம் ரூபாய் நிதி உதவி அளிக்கப்பட்டுள்ளது.

இதேபோன்று, வவுனியா - நெடுங்கேணி பிரதேசத்தில் அமைந்துள்ள ஸ்ரீ முனீஸ்வரர் ஆலய கட்டட பணிக்காக 50 ஆயிரம் ரூபாய் நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது. இந்த வேலைகளை மற்றும் திருமலை ஆலயங்களுக்கு சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் மோகனதாஸ் சுவாமிகள் கடந்த 4ஆம் திகதி நேரடியாக சென்று பார்வையிட்டு உதவிகளை வழங்கிவைத்தார். அவருடன், ஆச்சிரம தொண்டர்களும் கலந்து கொண்டனர். (ஐ)

# தமிழாராய்ச்சி மாநாட்டு படுகொலை; 49ஆவது நினைவேந்தல் நிகழ்வு நேற்று!





யாழ்ப்பாணம், ஜன. 11

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் படுகொலை செய்யப்பட்டவர்களின் 49ஆவது நினைவேந்தல் நேற்று இடம்பெற்றது.

யாழ்ப்பாணம் முற்றவெளியில் அமைந்துள்ள உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டு படுகொலை நினைவாலயத்தில் இரு பிரிவுகளாக இரண்டு தடவைகள் இந்த நினைவேந்தல் அனுஷ்டிக்கப்பட்டது.

இந்த நினைவேந்தலில் பொது மக்களும் தமிழ் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளும் எவ்வித பேதமுமின்றி கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தவேண்டுமென முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் அழைப்பு விடுத்திருந்த நிலையிலும், இரு பிரிவுகளாக நினைவேந்தல் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

நேற்றுக் காலை 10 மணிக்கு இந்த நினைவேந்தல் நடைபெறுமென சிவாஜிலிங்கம் அறிவித்திருந்தார். நேற்றுக் காலை 9.30 மணியளவில் தமிழரசுக் கட்சியின் ஏற்பாட்டில் நினைவேந்தல் நடத்தப்பட்டிருந்தது.

இதில் தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன், தமிழரசு மூத்த துணைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் உள்ளிட்ட தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த உள்ளூராட்சி மன்றங்களின் தவிசாளர்கள், உறுப்பினர்கள், கட்சியின் ஆதரவாளர்கள் கலந்துகொண்டனர்.

ஆனாலும் ஏனைய கட்சிகளின் ஒரு சில உறுப்பினர்களும் அதே நேரத்தில் மறவன்புலவு சச்சிதானந்தமும் கலந்து கொண்டிருந்தனர்.

இதேவேளை, தமிழ்த் தேசியக் கட்சியின் செயலாளர் நாயகம் எம்.கே. சிவாஜிலிங்கத்தின் ஏற்பாட்டில் காலை 10 மணியளவில் மற்றுமொரு நினைவேந்தல் அனுஷ்டிக்கப்பட்டது.

இதில் கூட்டமைப்பின் பங்காளிகள் கட்சிகளின் உறுப்பினர்கள், குறிப்பாக ரெலோ, புளொட் ஆகியவற்றின் உள்ளூராட்சி மன்ற தவிசாளர்கள், உறுப்பினர்கள், தமிழ்த் தேசியக் கட்சியின் உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் கலந்துகொண்டனர்.

**பக்க வடிவமைப்பாளர் தேவை!**



**பத்திரிகை பக்க வடிவமைப்புக்கு ஆட்கள் தேவை**

**Adobe InDesign, Adobe Photoshop**

**தெரிந்தவர்கள் - பத்திரிகை துறையில் அனுபவம் உள்ளவர்கள் (ஆண், பெண் இருபாலாரும்) விண்ணப்பிக்க முடியும்.**

விண்ணப்பங்களை
**eelanaduweekly@gmail.com**
என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அல்லது
**ஈழநாடு, இல. 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்**
என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 11.01.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.